

JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 07 |
September 2024 |
Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 |
Single Copy ₹ 10

என்னை விசாரிக்கவும், அன்பு காட்டவும், வழிநடத்தவும் இயேசு உண்டு; அவரே...

## விசாரிக்கும் தேவன்!

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

# வாலிபர் உலகம்

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு **SMS அல்லது Whatsapp** மூலமாக தெரியப்படுத்துங்கள்.




## உள்ளே...




## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹ 10/-

ஆண்டு சந்தா ₹ 100/-

ஆயுள் சந்தா ₹ 1000/-

**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **youth.jesusredeems.com** என்ற **website** மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

ஆசிரியவுரை

எனக்கு மிகவும் பிரியமான வாலிப மகளே(னே)!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! கடந்த மாதம் முழுவதும் கண்மணிபோல உங்களை பாதுகாத்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். நாம் வாழ்கின்ற இந்த உலகம் பல நேரங்களில் சுயநலமாகவே காணப்படுகிறது. பிறரைக் குறித்து யோசிக்காமல் எல்லாவற்றையும் தனக்காக சுயநலமாக சிந்திக்கும் மனப்பான்மை கொண்டதாக இருக்கிறது. வேதனையோடும், துக்கத்தோடும் வாடும் மக்களை ஏன் என்று கேட்கவோ, விசாரிக்கவோ கூட மனம் இல்லாத சுயநலமான வாழ்க்கையை தான் இன்றைக்கு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் நம்முடைய தேவன் அப்படியல்ல, ''நீ எப்படி இருக்கிறாய்? உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று விசாரித்து, நம்முடைய சூழ்நிலையை நன்கு புரிந்து உதவி செய்கின்றவர்.

- அனாதையாய் அலைந்த ஆகாரைப் பார்த்து, "எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?" என்று விசாரித்து, அடிமைப் பெண்ணாய் இருந்தாலும் அவளுக்கான ஆறுதலைக் கொடுத்து, அவளின் அங்கலாய்ப்பைக் கேட்டு அவளுக்கு ஒரு வழியைக் காண்பித்தார்.

- பாதையோரம் அமர்ந்து பிச்சைக் கேட்ட பார்திமேயுவின் அவலக் குரலைக் கேட்ட இயேசு, நின்று, "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்" என்றார். பலரும் அவனை அமைதிப்படுத்தி முடக்கிய போதும், அவனுடைய விசுவாசக் குரலைத் தூரத்தில் கேட்ட இயேசு அவனுடைய துயரை நீக்கும் வண்ணம் அவனை விசாரித்து அவன் கண்களைத் திறந்தார்.

- 38 வருஷமாய் மனிதர்களால் மறக்கப்பட்டு, உறவுகளால் ஒதுக்கப்பட்ட ஒரு மனிதனை இயேசு தேடிச் சென்று "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா"? என்று கேட்டார். பலமுறை தன் வாழ்க்கை முடிந்தது, மறுவாழ்வு இல்லை என்று உடைந்து போன அவனை தன்னுடைய விசாரிப்பினால் விடுதலையைக் கொடுத்து ஒரு விடியலைக் காட்டினார்.



இதை வாசிக்கும் வாலிபர்களே, அநேக நேரம் 'என்னை விசாரிக்க ஆள் இல்லையே, அன்புகாட்ட ஒருவர் இல்லையே,' என்று ஏங்கி நிற்கிறீர்களா? உங்களை விசாரித்து, உங்களுடைய உள்ளான வேதனைகளைப் புரிந்து கொள்ள தேவன் ஒருவர் உண்டு. உங்களுக்காகவே அழகிய திட்டங்களைக் கொடுத்து, வாழ்க்கையில் பல ஆசீர்வாதங்களை, வெற்றிகளை முன்குறித்திருக்கிற தேவன் உங்களுக்கு உண்டு. அவரைச் சார்ந்து, அவரோடு இசைந்த ஒரு வாழ்க்கை வாழ நீங்கள் அர்ப்பணிக்கும் போது, அநேகருக்கு ஆசீர்வாதமாய் மாறலாம்.





உன்னை விசாரித்து
உயர்த்திய இயேசு!
தம் ஜனங்களை விசாரிக்க,

உன்னை அழைக்கிறார்!

உன் நிமித்தம் அநேகர் ஆறுதல்
அடைவார்கள்! நீ எழும்பு!

கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

சாட்சி தொகுப்பு: பெனிட்டா



# ஜார்ஜ் VS விளையாட்டு



**சிறுவயதிலேயே படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கி அநேக பரிசுகள் பெற்று, FOOTBALL விளையாட்டில் STATE LEVELல் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு ஒரு இஞ்ஜினியராக பணிபுரிந்து வரும் சகோ. ஜார்ஜ் ஆபிரகாம், தன்னுடைய வெற்றியின் ரகசியத்தையும் சாட்சியையும் நம்மிடம் பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள். வாருங்கள் கேட்டு தெரிந்துகொள்வோம்.**



**ஹலோ ஜார்ஜ்!! உங்களுடைய குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் திரு. ஸ்பர்ஜன் குமார், திருமதி கலாராணி குமார் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக மும்பையில் பிறந்து வளர்ந்தேன். எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறார். அவர் சொந்தமாக ஒரு கம்பெனியை நடத்தி வருகிறார். எனது சொந்த ஊர் திருநெல்வேலி. எனது அப்பா திருமணத்திற்கு முன்பு வேலைக்காக மும்பைக்கு வந்து இங்கேயே settle ஆகிவிட்டார். நான் ஒரு பாரம்பரியமிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். எல்லா ஞாயிறும் குடும்பமாக நாங்கள் ஆலயத்திற்கு செல்வோம். நாங்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும்போது பெற்றோர் எங்களுக்கு வசனத்தை சொல்லிக் கொடுத்து, அதை மனப்பாடம் செய்ய வைப்பார்கள். சிறுவயதிலேயே ஆலயத்தில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் என்னை உற்சாகப்படுத்தி கலந்துகொள்ள வைப்பார்கள். பள்ளியிலும் நான் சிறந்த மாணவனாக இருந்தேன். பள்ளியில் எனக்கென்று ஒரு நல்ல பெயர் இருந்தது.

**சூப்பர்... உங்களுடைய குடும்பத்தைப் பற்றி சொன்னீர்கள்... உங்களுக்கு சிறுவயதிலிருந்தே விளையாட்டு மீது ஆர்வம் இருந்ததா?**

ஆம், சிறுவயதிலிருந்து விளையாட்டின் மீது எனக்கு அதிக ஆர்வம் இருந்தது. Chess, carom போன்ற indoor games விளையாடுவேன். அதுமட்டுமின்றி athleticsல் 100m, 200m ஓட்டப்பந்தயங்களிலும் பங்குபெற்று நிறைய medals வாங்கியிருக்கிறேன். 7ஆம் வகுப்பு படிக்கும் போது நண்பர்களோடு கால்பந்து விளையாட ஆரம்பித்தேன்.




அதிலிருந்து எனக்கு football மீது அதிக ஆர்வம் வர ஆரம்பித்தது. அதற்குபிறகு Coaches என்னை Train பண்ண ஆரம்பித்தார்கள். கடினமாக பயிற்சி செய்து ஸ்டேட் லெவலுக்கு செலக்ட் ஆனேன். இதன்மூலம் நிறைய அவார்ட்ஸ் வாங்கியிருக்கிறேன். மிகவும் வெறித்தனமாக விளையாடுவேன்.

**Wow சூப்பர்..! என்னென்ன அவார்ட்ஸ், எதற்காக வாங்கியுள்ளீர்கள் என்று சொல்ல முடியுமா?**

படிப்பிலும் விளையாட்டிலும் கிட்டத்தட்ட நான் 250 சான்றிதழ்களுக்கு மேல் வாங்கி இருக்கிறேன். 100 மீட்டர் 200 மீட்டர் ஓட்டப் போட்டிகள் மற்றும் நீளம் தாண்டுதல் போன்றவற்றில் கலந்து கொண்டதில் தான் எனக்கு நிறைய பதக்கங்கள் (Medals) கிடைத்தன. இதுத்தவிர extra-curricular activitiesக்காகவும் அநேக certificates வாங்கியுள்ளேன். பள்ளியில் நன்றாக படித்ததற்கு Trophy வாங்கியிருக்கிறேன். சின்ன வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ''ஆண்டின் சிறந்த மாணவர்'' (Best student of the Year) என்ற ஒரு Trophyயும் வாங்கினேன். Football விளையாட்டிற்கு அநேக shields மற்றும் சான்றிதழ்கள் பெற்றிருக்கிறேன். இப்படி படிப்படியாக உயர்ந்து தேசிய அளவிலான கால்ப்பந்து வீரனாகி, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள San Diegoவில் நடைபெற்ற GYLSல் (The Global Youth Leaders' Summit) இரண்டு முறை இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினேன்.



**இத்தனைப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்ற நீங்கள் நிச்சயம் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் தான்.!! சரி... கால்ப்பந்து விளையாட்டின்போது நிறைய காயங்கள் ஏற்படுவது சகஜம். அப்படி அடிபட்ட மறக்கமுடியாத அனுபவம் ஏதாவது உண்டா?**

Football விளையாடும் போது நிறைய அடிகள் படும். பல நேரங்களில் அப்படி ஏற்பட்ட சின்ன சின்ன காயங்களுக்கு ஜெபம் செய்துவிட்டு, மருந்துகள் போட்டால் சரியாகிவிடும். ஆனால் 2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒருநாள் நான் கிளப்பில் விளையாடிக் கொண்டிருந்தபோது, defender தாக்கியதில் எனது கணுக்கால் அடிபட்டது. எப்பொழுதும் அடிபடுவது போல நினைத்து நானே மருந்து மாத்திரைகள் போட்டு வந்தேன். ஒரு வாரத்திற்கு பிறகும் எனக்கு அந்த வலி குறையவில்லை. கால் மிகவும் வீங்க ஆரம்பித்தது. கால் வலியினால் என்னால் இரவெல்லாம் தூங்க முடியவில்லை. இரவில் எழுந்து உட்கார்ந்து காலைத் தடவி விட்டுக்கொண்டே இருப்பேன். நொண்டி நொண்டி தான் நடப்பேன். என்னால் தனியாக நடக்க முடியாது. மற்றவர் துணையோடு தான் என்னால் நடக்க முடியும். டாக்டரிடம் சென்று X-ray எடுத்துப் பார்த்தபோது, ஆறு மாதங்கள் மருந்து எடுக்க வேண்டும் மற்றும் Physiotherapy செய்ய வேண்டும் என்றும், காலை அசைக்காமல் வைத்திருந்தால் தான்



சரியாக வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லி மருந்து கொடுத்தார். காலில் அடிப்பட்டதால் விளையாட முடியாமல் மிகவும் சோர்ந்து போனேன்.



**டாக்டர் சொன்னதுபோல் மருந்துகள் சாப்பிட்டு physio செய்து வந்தது பலனளித்ததா? எப்படி அதிலிருந்து குணமடைந்தீர்கள்?**

10 நாட்கள் மருந்து சாப்பிட்டும் physio செய்தும் எனக்கு வலி குறையவே இல்லை. இந்நிலையில் என் நிலையைக்கண்டு மிகவும் மனமுடைந்த என் பெற்றோர் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் பங்கு பெறும்படி என்னை உற்சாகப்படுத்தினர். 2023 ஆம் ஆண்டு மே மாதம் நாங்கள் குடும்பமாக அமர்ந்து மாதந்தோறும் கடைசி ஞாயிறன்று ஒளிபரப்பப்படும் அற்புத பெருவிழாவைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது Mohan uncle ஜெபத்தில் ''ஜார்ஜ் ஆபிரகாம்'' என்று என் பெயரை சொல்லி அழைத்ததோடு, என் வியாதியையும் சொல்லி, இயேசு கிறிஸ்து இப்பொழுது சுகம் கொடுக்கிறார் என்று சொன்னார்கள். அந்த ஜெபம் என்னை மிகவும் உற்சாகப்படுத்தியதோடு, எனக்குள் ஒரு புது நம்பிக்கையையும் பிறப்பித்தது. என் உள்ளத்தில் அளவில்லாத சந்தோஷம். ஜெபித்த மூன்றாவது நாளிலிருந்து எழும்பி யார் துணையும் இல்லாமல் நடந்து கடைக்கு செல்ல ஆரம்பித்தேன். ஒரு வாரம் கழித்து நான் கால்ப்பந்து விளையாட மைதானத்திற்கே சென்றுவிட்டேன். காலில் அடிபடுவதற்கு முன்பு எப்படி விளையாடினேனோ, அதைவிட அதிகமாக ஓடி விளையாடினேன். இப்போது என் காலில் எந்த பிரச்சனையும் இல்லை. அதன்பிறகு எந்த மருந்து மாத்திரைகளும் நான் எடுக்கவும் இல்லை. ''ஆறு மாதம் மருந்து எடுக்க வேண்டும், ஓய்வெடுக்க வேண்டும்'' என்று சொன்ன மருத்துவர், ஒரே மாதத்தில் சரியானதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இது இயேசுவால் மட்டும் தான் ஆயிற்று என்று என்னால் சொல்ல முடியும்.



**சூப்பர்... இவ்வளவு பெரிய அற்புதம் செய்த ஆண்டவருக்காக என்ன செய்கிறீர்கள்?**

ஆண்டவருக்கும் எனக்கும் உள்ள உறவில் இன்னும் வளர ஆரம்பித்து உள்ளேன். எனக்கு இவ்வளவு சீக்கிரம் சுகம் கிடைத்ததைப் பார்த்த என் நண்பர்கள் அனைவருக்கும் மிகுந்த ஆச்சரியம். ஆகையால் எனக்கு நடந்த அற்புதத்தை அவர்களுக்கு சொல்ல ஆரம்பித்தேன். நிறைய முகாம்களில் கலந்து கொண்டு என் ஆவிக்குரிய வாழ்க்கையை மெருகேற்றிக் கொண்டிருக்கிறேன். என்னால் முடிந்த சிறு சிறு ஊழியங்களையும் செய்து வருகிறேன். மும்பையில் BE Computer Science படித்து அங்கேயே வேலை செய்து வந்த நான், தற்போது பெங்களூரில் உள்ள ஒரு கம்பெனியில் Data இன்ஜினியராக வேலைப் பார்த்து வருகிறேன். மட்டுமல்ல மும்பை கார்ட்டர் ரோட்டிலுள்ள லியோ கிளப்பின் உறுப்பினராகவும் உள்ளேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இன்றைய தலைமுறையினர் அனைவரும் வீட்டில் இருந்து எல்லாவற்றையும் சாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது தவறு. உங்களுடைய உடல் வலிமை பெற வேண்டுமானால் வெளியே சென்று விளையாட வேண்டும். வெளியே சென்று விளையாடுவதற்கும், வீட்டில் விளையாடுவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. வெளியே செல்லும்போது பொறுமையைக் கற்றுக் கொள்ளலாம், உற்சாகமாகவும் இருக்கலாம். மைதானத்தில் சென்று விளையாடாதவர்கள் மிகவும் சோம்பேறித்தனமாக இருப்பார்கள். எனவே வெளியே சென்று விளையாடுவது மிகவும் நல்லது. அதுபோல சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமானால், வெளியே சென்று உங்களால் முடிந்த சிறு சிறு ஊழியங்களை செய்யலாம். உங்களுடைய சாட்சியை மற்றவர்களுடன் பகிரும்போதே ஆண்டவருடைய நாமம் மகிமைப்படும். அதற்கு இயேசு உங்களுக்கு கிருபை கொடுப்பார். உற்சாகமாக இருங்கள்! வெளியே புறப்பட்டு செல்லுங்கள்!!

அன்பான வாலிபர்களே! நீதிமொழிகள் 13:4ல் ''சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது'' என்று சொல்லப்பட்டது போல் சாதிக்க வேண்டும் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் போதாது. சகோதரர் ஜார்ஜ் போல முயற்சியுங்கள்! சிறு சிறு காயங்களையும் தோல்விகளையும் கண்டு சோர்ந்து முடங்கி விடாமல், வலிகளைத் தாங்கி, சோம்பலை நீக்கி முன்னேற முயலுங்கள். கர்த்தர் உங்களுக்கு துணை நிற்பார்!!

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் மறைந்திருக்கும் நபர்களின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பவும்.






















## கடந்த மாத விடைகள்

1) ஆபிரகாம் (யாக்கோபு 2:23)
2) எலிப்பாசு, பில்தாது, சோப்பார் (யோபு 2: 11,13)
3) லாசரு, மரியாள், மார்த்தாள் (யோவான் 11:5)
4) ஏரோது, பிலாத்து (லூக்கா 23:6-12)
5) ஆக்கில்லா, பிரிஸ்கில்லா (ரோமர் 16:3,4)
6) ஈராம் (1 இராஜா 5:1 & 2 சாமு. 5:11)
7) தானியேல் (தானி. 2:48,49)
8) தாவீது, யோனத்தான் (1 சாமு. 18:1-3)
9) தானியேல் - சாத்ராக்
   தாவீது - யோனத்தான்
   இயேசு - லாசரு
10) ஜீவனைக் (யோவான் 15:13)

BIBLE Treasure Hunt

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோ. அருண், திருச்சி

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.09.2024**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அவி

# பார்த்ததால் பறிபோனேன்...




**அண்ணா, நான் ஒரு IT கம்பெனியில் software engineerஆக பணிபுரிந்து வருகிறேன். என்னால phoneல் ஆபாசமான காட்சிகளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. திரும்ப, திரும்ப நான் அந்த இச்சையான பாவத்தையேப் பார்க்கிறேன். மணிக்கணக்காக phoneல் இதையே பார்த்துக் கொண்டிருப்பதால் வேலையில் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. என்னுடைய performance சரியில்லை என்பதால் வேலையும் போகும் அபாயத்திற்கு வந்து விட்டது. இது எதுவுமே என் பெற்றோருக்கு தெரியாது. ஒரு பக்கம் பாவ போராட்டம், மற்றும் வேலை பிரச்சனை இன்னொரு பக்கம் குற்றமனசாட்சி; இப்படி பல இன்னல்களுக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறேன். Please, இதிலிருந்து நான் எப்படி வெளியே வர வேண்டும் என்று ஒரு தெளிவான ஆலோசனை சொல்லுங்கள் அண்ணா.**

**- செல்வா, சித்தூர்.**

அன்பு தம்பி செல்வா, உங்களுடைய வேதனையைப் புரிந்துகொள்ள முடிகிறது. விரும்புகிறதை செய்யாமல் விரும்பாததை செய்கிறேன் என்ற வருத்தமும், வேதனையும் உங்களை வாட்டுவதை என்னால் நன்கு உணர முடிகிறது.

செல்வா, எந்த ஒரு படுகுழியிலிருந்தும், வெளிவர முயன்றால் நிச்சயம் வெளிவரலாம். இந்த பாவ அடிமைத்தனமும் அப்படித்தான். செல்வா, நீங்கள் 'வீழ்ந்துக் கிடக்கின்றேனே' என்று வருத்தப்படுகிறீர்கள். ஆனால் இந்த பாவப்பழக்கம் ஒரு அடிமைத்தனமாக மாறுவதற்கு 4 **Stages** உள்ளன.

**Stage 1 - Slip:** ஒரு சறுக்கல் ஏற்படும். அந்த சறுக்கல் ஏற்படும்போதே சமாளித்திருந்தால், இந்தப் பாவத்திலிருந்து தப்பித்து இருக்கலாம். அல்லது, தேவனே எனக்கு உதவுங்கள் என்று கதறியிருந்தால் அந்த சறுக்கலில் இருந்து மீண்டிருக்கலாம்.

**Stage 2 - Symptoms:** அடிக்கடி ஏற்படுகின்ற அல்லது அடிக்கடி செய்கின்ற பழக்கமாகும்.

**Stage 3 - Sin:** பாவமாக குடி கொள்ளும்.

**Stage 4 - Strong hold:** கோட்டையாக நிரந்தர இருப்பிடமாக ஆட்கொண்டு விடும்.

இத்தனை நிலைகளைத் தாண்டும் போதுதான், பாவம் நிரந்தரமாக நம்மிடையே குடி கொள்கின்றது.

- முதல் படி, சிந்தனையிலேயே இந்த பாவத்தை வெல்லலாம்; ஆனால் சிந்தனையில் நுழையவிட்டு விடுவதால் தான், நாம் சறுக்குகிறோம்.
- நாளடைவில் அந்த சறுக்கல் சகஜமாகி விடுகின்றது. எனவே தான் தவறான காட்சியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி தோன்றுகிறது.
- நாட்கள் போகப்போக அது பாவமாக குடிகொண்டு, முடிவில் நம்மை ஸ்தம்பிக்க செய்கின்றது.

## இந்த பாவத்தை எப்படி மேற்கொள்வது?

- தனிமை நேரங்களை தவிர்க்க வேண்டும். முடிந்த அளவு ஒரு குழுவாகவோ, அல்லது நண்பர்களுடனோ இருக்க முயலுங்கள்.




- இரவில் எந்த வேலையாக இருந்தாலும் 9:30 மணிக்கு மேல் செல்போன் பயன்படுத்தக் கூடாது என்று தீர்மானித்து, செல்போனை off செய்யுங்கள்.



- பகல் நேரங்களில் Whatsappல் வரும் எல்லா செய்திகளையும் படிப்பது மற்றும் Videos பார்ப்பதை தவிர்க்கவும். காரணம், இந்த காட்சிகளும், உங்கள் சிந்தனைகளை பாதிக்கலாம்.
- செய்தித்தாள் வாசித்தாலும் தவிர்க்க வேண்டிய பகுதிகளை பார்ப்பதற்கும், படிப்பதற்கும் முயல வேண்டாம். காரணம், அந்த சின்ன, சின்ன புகைப்படங்களும், குறுஞ்செய்திகளும், உங்கள் மனதில் தேவையில்லாத எண்ணத்தை உண்டாக்கலாம்.
- வாகனத்தில் போகும் போதும், பேருந்தில் பயணம் செய்யும் போதும், வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர்க்கலாம். உங்கள் கண்கள் நேராக இருந்தால் சிந்தனை சீராக மாறும்.

**இவை எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கண்களுக்காகவும், சிந்தனைக்காகவும் ஜெபம் செய்யுங்கள். தேவன் இந்த இச்சையைத் தூண்டுகின்ற எண்ணங்களை மேற்கொள்ள உதவி செய்வார்.**

உங்களை தனிமையில் வீழ்த்த சாத்தானுக்கு தெரியும்...! ஆனால் தனிமையில் காத்து, வெற்றிக் கொடுத்திட இயேசுவுக்கு முடியும்.

வேதத்தில் உள்ள வசனங்களை அறிக்கை செய்து, ஜெயம் பெறுங்கள்.

- **கண்களுக்கான வசனம்:** என் கண் சரீரத்தின் விளக்கு (மத். 6:22,23; 5:28) என் கண்ணோடு உடன்படிக்கை (யோபு 31:1).
- **இருதயத்திற்கான வசனம்:** எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள் (நீதி. 4:23).
- **சிந்தனைக்கான வசனம்:** எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம் (2 கொரி. 10:5).

இப்படி ஒவ்வொரு அவயவங்களுக்கும் வசனத்தைக் கொண்டு அறிக்கை செய்து ஜெபித்து, இந்த பாவத்திலிருந்து ஜெயம் பெறுங்கள். '**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்**' (நீதி. 28:13) என்று வேதம் தெளிவாக சொல்கிறது.



செல்வா, தேவன் உங்களுக்கு நிலையான, நிரந்தரமான ஒரு விடுதலையைக் கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் அற்புத விடுதலையைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து அவருக்காக செயல்படுங்கள். நீங்கள் பாவத்தை மேற்கொண்டு பரிசுத்தமாய் வாழும்போது, உங்கள் வாழ்வில் குழப்பங்கள் அல்ல, உயர்வுகளும், வெற்றியும் நிச்சயம் வரும். விடுதலைப் பெற்று வெற்றியை நோக்கி பயணிக்க வாழ்த்துக்கள்! தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!

# சமாதான பிரபு இயேசு!





செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27).**

இன்றைக்கு எல்லா இடங்களிலும் சமாதானமற்ற சூழ்நிலை; வேலை ஸ்தலத்தில், வியாபார ஸ்தலத்தில், பிள்ளைகளுடைய வாழ்க்கையில் சமாதானம் பாதிக்கப்பட்ட ஒரு வேதனையான காரியம். +2 தேர்வில் ஒரு மார்க் குறைந்து விட்டால் பிள்ளைகளுக்கு சமாதானம் போய் விடுகிறது. குழப்பம், டென்ஷன் வந்து விடுகிறது, 'ஏன் எனக்கு இப்படி ஆகிறது, செத்துவிடலாம்' என்றெல்லாம் தோன்றுகிறது. ஒரு மார்க்கில் சமாதானம் பாதிக்கப்படுகிறது. ஒரு சின்ன தலைவலி வந்துவிட்டால், வீட்டிற்குள் சமாதானம் பாதிக்கப்படுகிறது, அமைதி போய்விடுகிறது. சிறிய காரியம்கூட உங்கள் சமாதானத்தை பாதித்து கலங்கப்பண்ணி விடுகிறது. காரணம் என்ன? உங்கள் உள்ளத்தில் சமாதானமில்லை. தேவ சமாதானம் இன்னும் உங்கள் இருதயத்தை ஆளுகை செய்ய வில்லை. இப்படி சமாதானமற்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற உங்களைப் பார்த்து ''என் பிள்ளைகளே! என்னுடைய சமாதானத்தை, தேவ சமாதானத்தை உங்களுக்கு நான் தருகிறேன்'' என்பதாக இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

## இயேசுவினுடைய சமாதானம் எப்படிப்பட்டது?

படகில் சீஷர்களோடு இயேசு பிரயாணப்பட்ட பொழுது பெருங்காற்று வீசி, அலைகள் கொந்தளித்து, படகு அமிழ்ந்துவிடுமோ என்ற சூழ்நிலையில், இயேசு படகில் அமைதியாக நித்திரை பண்ணிக் கொண்டிருந்தார். இந்நிலையில் சீஷர்கள் இயேசுவை அவசரமாக எழுப்பினர். எழுந்து பார்த்தபோது, காற்று பலமாய் வீசியதால், கடல் கொந்தளித்து, படகு தத்தளித்துக் கொண்டிருந்தது. இயேசு இவைகளைப் பார்த்து பயப்படவில்லை; அவர் சீஷர்களைப் பார்த்து ''ஏன் பயப்படுகிறீர்கள்? உங்கள் விசுவாசம் எங்கே'' என்று கேட்டு, 'இரையாதே அமைதலாயிரு' என்று சொன்னார். கடல் அமைதியாகி விட்டது. எல்லாரும் பயந்து நடுங்கும்போது, இயேசு அவ்வளவு அமைதியாக, சமாதானமாக எழுந்து நின்று ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டார். அதுதான் இயேசுவினுடைய சமாதானம். இந்த சமாதானத்தை நமக்கு அருளும்படியாகத்தான் இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்.

இயேசு சமாதானத்தை அருள உலகத்தில் வந்திருந்தால், ஏன் மனிதனுடைய உள்ளத்தில் சமாதானம் இல்லை? ஏன் குடும்பத்திற்குள் சமாதானம் இல்லை? சமாதானமற்ற சூழ்நிலையை தான் நாம் எங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு மனிதனுடைய சமாதானம் பாதிக்கப்பட காரணம் என்ன?

### பாவம்

ஏதோவொரு பாவம், உங்கள் உள்ளத்தை கறைப்படுத்தினபடியினால், ஏதோ ஒரு பாவம் தொடர்ந்து வருகிறபடியினால் உங்கள் சமாதானம் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கலாம். (பாவத்தில் வாழ்கிற மனிதனுக்கு சமாதானம் இல்லை - ஏசாயா 57:21).



சமாதான பிரபு இயேசு இந்த உலகத்தில் உலாவின நாட்களில் பாவியாகிய ஒரு பெண் இயேசுவின் பாதத்தில் வந்து விழுந்து கண்ணீர்விட்டு அழுதாள் (லூக்கா 7:37-50). தன் கண்ணீரினால் இயேசுவின் பாதத்தை நனைத்தாள். அவள் வாயினால் இயேசுவினிடத்தில் ஒன்றும் சொல்லவுமில்லை கேட்கவுமில்லை. அவள் இருதயம் நொறுங்கி அழுது கொண்டிருந்தாள். 'இயேசுவை இவள் எப்படி தொடலாம்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு பாவத்தில் வாழ்ந்த ஒரு பெண். ஆனால் இயேசுவினுடைய கண்கள் அவளை ஊடுருவி பார்த்தது; அவள் பாவம் தான் அவளுக்குள் பாதிப்பைக் கொண்டு வந்தது; அதினால் சமாதானமின்றி அழுதுகொண்டிருந்தாள். ''சமாதானத்தோடே போ, உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது'' என்று சொல்லி இயேசு அவள் உள்ளத்தில் நிரந்தரமான சமாதானத்தை கொடுத்தார். பாவம் உள்ளத்தில் இருக்கும் வரைக்கும் சமாதானம் பாதிக்கப்பட்டு கொண்டே இருக்கும்.

## வியாதி

**"அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்" (மாற்கு 5:34).**

12 வருடங்கள் பெரும்பாடு என்கிற நோயினால் அவளுடைய சரீரம் பாதிக்கப்பட்டு எலும்பும் தோலுமாக அவள் இருந்திருக்க வேண்டும். சமாதானம் போய்விட்டது, நிம்மதி போய்விட்டது. வியாதி வரும்பொழுது சமாதானம் பாதிக்கப்படுகிறது. குடும்பத்தில் ஒருவர் வியாதிப்பட்டால்கூட முழு குடும்பமும் பாதிக்கப்படுகிறது. ''நான் உன்னை சுகமாக்கி சமாதானத்தால் நிரப்புவேன்'' என்று இயேசு உங்களைப் பார்த்து சொல்கிறார். எந்த வியாதியாக இருந்தாலும் அவரால் மாற்ற முடியும். நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான் ''இயேசு எனக்கு அற்புதம் செய்வார்'' என்று விசுவாசியுங்கள்.



## பயம்

**"வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்" (யோவான் 20:19).** ஏனென்றால், அவர்கள் சமாதானம் பாதிக்கப்பட்டிருந்தது. பயத்தினால் அவர்கள் சமாதானம் பாதிக்கப்பட்டது? அவர்கள் பயந்து அறைக்கதவைப் பூட்டி வீட்டிற்குள் முடங்கி கிடந்தார்கள் என்று வேதம் சொல்கிறது. ஒரு பயம் அவர்களுடைய சமாதானத்தை பாதித்து விட்டது. ''இந்த மதத்தலைவர்கள் இயேசுவையே கொலை செய்து விட்டார்கள்! நம்மையும் கொன்று விடுவார்கள்'' என்று மனிதர்களைக் குறித்த ஒரு மரண பயம் வந்தது.



'இந்த இயேசுவை நம்பி, படகை விட்டு, குடும்பத்தை விட்டு, எல்லாவற்றையும் விட்டு அவரை பின்பற்றி வந்தோம். இப்போது அவர் மரித்து, அடக்கம்பண்ணியாகி விட்டது, இனி எப்படி வாழப் போகிறோம்? என்ன செய்வது? எப்படி செய்வது? என்ற மரண பயம் ஒரு பக்கம், எதிர்காலத்தைக் குறித்த பயம் இன்னொரு பக்கம். இந்த பயத்தினால் சீஷர்கள் உள்ளத்தில் சமாதானமில்லாமல் கலங்கிக் கொண்டிருந்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசு வந்து நின்று, ''உங்களுக்கு சமாதானம்; ஏன் பயப்படுகிறீர்கள்? நான் உயிரோடு இருக்கிறேன்'' என்று சொன்னவுடன் பயம் விலகினது. அவர்களுடைய உள்ளத்தில் சமாதானமும் சந்தோஷமும் உண்டானது.

**அன்பானவர்களே! இன்றைக்கு உங்களுக்கும்கூட பொல்லாத மனிதர்களைக் குறித்த பயம், சிலருக்குள் மரண பயம், சிலருக்குள் எதிர்காலத்தைக் குறித்த பயம், தேவைகளைக் குறித்த பயம், கடன் பிரச்சனையைக் குறித்த பயம், சூழ்நிலைகளைக் குறித்த பயம். ஏதோ ஒரு பயம் உங்கள் உள்ளத்தை வாட்டி வதைத்து, உங்கள் சமாதானத்தை கெடுத்துக் கொண்டிருக்கிறதா? "நான் உங்களுக்கு சமாதானத்தை வைத்துப் போகிறேன்" என்று இயேசு சொல்கிறார். அந்த சமாதானம் நமக்குள்ளே வந்து விட்டால் நம்மை சுற்றிலும் எத்தனை புயல் காற்று வீசினாலும், படகு அமிழத்தக்கதான சூழ்நிலை உண்டானாலும், நம் இருதயத்தில் ஒரு அமைதி இருக்கும். ஒரு சமாதானம் இருக்கும். ஏன் பயப்பட வேண்டும்? ஏன் கலங்க வேண்டும்? எதற்கு அங்கலாய்க்க வேண்டும்? இயேசு நம்மோடு இருக்கிறார் அல்லவா?**

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-8



Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதமும் வீரமுள்ள தீமோத்தேயு என்னும் இத்தொடரின் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**என்னங்க சுதந்திர தினத்தை நன்றாக Celebrate பண்ணீங்களா? ஒருகாலத்தில் ஆங்கிலேயரிடம் அடிமையாக இருந்த நமது இந்திய நாடு விடுதலை அடைந்து, இப்பொழுது வளர்ந்து வருகிற நாடுகளின் பட்டியலில் இருப்பது நமக்கு மிகுந்த சந்தோஷம் தானே.**

இதே மாதிரி தாங்க பாவத்திற்கு அடிமையாக இருந்த நமக்கு விடுதலையையும், யூத ராஜ சிங்கத்தின் பிள்ளை என்ற முத்திரையையும் ஆண்டவர் நமக்கு கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய சந்தோஷம் அல்லவா? நமது நாட்டின் சுதந்திரத்தை மட்டுமல்ல, நமக்கும் விடுதலை கொடுத்த தேவனை நாம் கொண்டாட வேண்டும் அல்லவா? சரி நாம் மட்டும் விடுதலை ஆனால் போதுமா?? விடுதலை வேண்டியவர்களுக்கும் அதை அறிவிப்பது நம்முடைய கடமை தானே...

விசுவாசியாக இருந்த தீமோத்தேயு ஆவிக்குரிய வாழ்வில் படிப்படியாக முன்னேறி, சீஷராகி பின் சபைகளை நடத்தும் பொறுப்பாளராக வளர்ந்தார். எபேசு சபையில் ஒரு பிரச்சனை காணப்பட்டதும் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவை அந்த பிரச்சனையை சரி செய்ய அங்கு அனுப்பினதையும் நாம் கடந்த மாத தொடர்களில் பார்த்தோம். அவர் தீமோத்தேயுவை அனுப்பிய பின் அவருக்கு ஒரு தொடர் கடிதத்தை எழுதுகிறார். அதுதாங்க நாம் வேதத்தில் வாசிக்கின்ற பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம். அப்படி அந்த கடிதத்தில் பவுல் என்ன தான் எழுதியிருக்கிறார்.? எபேசு சபையின் பொறுப்பாளராக இருந்து தீமோத்தேயு செய்ய வேண்டிய சீர்திருத்த பணிகள் என்ன? வாங்க பார்க்கலாம்.

### கள்ள போதகங்களை அகற்றும் பணி

எபேசு சபையில் இமெனேயு, அலெக்சந்தர் போன்றவர்கள் எழும்பி இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் போதித்த போதனைகளுக்கு பொருந்தாத மோசமான, வினோதமான போதனைகளை போதித்து வந்தனர். இதனால் சபையில் வாக்குவாதங்கள் ஏற்பட்டது. சிலருடைய விசுவாசம் சேதமடைந்தது. அவர்களது கள்ள போதகங்களை முடிவுக்கு கொண்டு வருவது மட்டுமின்றி, விசுவாசிகள் அதற்கு செவிசாய்க்காதபடி அவர்களுக்கு கட்டளையிடும் பணி தீமோத்தேயுவுக்கு கொடுக்கப்பட்டது.

### ஜெபிக்கிறவர்களை எழுப்பும் பணி

அந்த சபையினர் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் ஏறெடுக்கவும், ரோமாபுரியில் ஆளுகை செய்யும் தலைவர்களுக்காகவும், பட்டணத்தின் சமாதானத்துக்காகவும் ஜெபிக்கிறவர்களாகவும் எழுப்பும் பணி தீமோத்தேயுவுக்கு கொடுக்கப்பட்டது.

## புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஆலோசனை சொல்லும் பணி

அந்த சபையின் புருஷர்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு ஆலோசனைகளாக எடுத்துரைத்து அதன்படி அவர்களை வழிநடத்துவதும் தீமோத்தேயுவிற்கு தலையாய கடமையாக கொடுக்கப்பட்டது.

## தலைவர்களை அமர்த்தும் பணி

எபேசு சபையை கண்காணிக்க, கர்த்தருக்கு பயப்படுகிற நேர்மையான குணம் கொண்ட, தங்கள் குடும்பத்தில் ஆரோக்கியமான உறவு கொண்ட ஒரு சிறிய குழுவை தேர்ந்தெடுத்து அவர்களை சபையின் மூப்பர்களாக, மேற்பார்வையாளர்களாக அமர்த்தும் பணி கொடுக்கப்பட்டது.

## தவறான உபதேசத்தை திருத்தி சத்தியத்தை போதிக்கும் பணி

கள்ளப் போதகங்களால் இடறிப்போயிருந்த அந்த சபையினருக்கு அவர்கள் விசுவாசத்தில் வளர்வதற்கு ஏதுவாக அந்த சபையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட, சபை சீர்திருத்த பணியை செய்கிற தீமோத்தேயுவின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக இருந்தால் மட்டுமல்லவா அவர் சொல்லுகிற ஆலோசனைகளும், எடுக்கும் பிரயாசங்களும் பயனுள்ளவைகளாக இருக்கும். எனவே பவுல் தீமோத்தேயுவிற்கு முன்மாதிரியான வாழ்க்கையை 1 தீமோத்தேயு 4ம் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். திருமணம் செய்யக்கூடாது, மாமிசம் உண்ணக்கூடாது அவைகள் அசுத்தமானது என்று தவறான போதனைகளை அந்த கள்ள போதகர்கள் போதித்து வந்தனர். அந்த காரியங்களில் மக்களுக்கு தெளிவு ஏற்படும்படியாக அவைகளைக் குறித்த சத்தியத்தை அந்த மக்களுக்கு போதிக்கும் பணியும் கொடுக்கப்பட்டது.



## விதவைகள் மற்றும் முதியவர்களை பராமரிக்கும் பணி

எபேசு சபையில் இருந்த விதவைகளுக்கு அக்கறை காட்டுதல் மற்றும் அங்கு இருக்கிற முதியவர்களை அன்புடன் பாவித்து அவர்களை மதித்து நேசித்து அவர்களை பராமரித்து அவர்களுக்கு நன்மையான காரியங்களை எடுத்துரைத்து புத்தி சொல்லும் பணியும் கொடுக்கப்பட்டது.

## நித்திய ஜீவனுக்காக சபையை ஆயத்தப்படுத்தும் பணி

வேலைக்காரர், விசுவாசிகளாகிய தங்கள் எஜமான்களிடத்தில் எப்படி கனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு புத்தி சொல்லி ஆலோசனை கொடுக்கும் பணி கொடுக்கப்பட்டது. எபேசு சபையில் உள்ள கிறிஸ்தவர்கள் நற்குணத்திலும், தாராள குணத்திலும் ஐசுவரியவான்களாக இருக்கவும் அவர்கள் நித்திய ஜீவனை பற்றிக்கொண்டிருக்க அவர்களை வழிநடத்தவும் தீமோத்தேயுவுக்கு பணி கொடுக்கப்பட்டது.


தீமோத்தேயுவிற்கு எழுதப்பட்ட முதலாவது நிருபம் ஒரு திருச்சபையின் தரிசனத்தை பற்றி கூறும் நிருபமாகும். ஒரு திருச்சபை எவ்வாறு இருக்க வேண்டும், அதில் உள்ள விசுவாசிகளாகிய ஆண்களும், பெண்களும், முதியவர்களும் விதவைகளும், எஜமான்களும் வேலைக்காரர்களும், மூப்பர்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறும் ஒரு முழுமையான திருச்சபையின் தரிசனத்தை அது விளக்குகிறது. அந்த திருச்சபையின் தரிசனத்தை நிறைவேற்றவே தீமோத்தேயு அனுப்பப்பட்டார்.

ஆலோசனை கொடுக்கவும், புத்தி சொல்லவும், கள்ள உபதேசங்களை அகற்றி சத்தியத்தை போதிக்கவும் அவருக்கு கொடுக்கப்பட்ட இந்த பணியில் அவர் சந்தித்த மக்கள் பல தரப்பினராய் இருந்திருப்பார்கள். அவரை விட வயதில் குறைந்தோர், வயதில் முதியோர், அனுபவசாலிகள் திறமைசாலிகள் என பலதரப்பட்ட மக்களை அவர் சந்தித்து இருப்பார். ஆனால் அவர்களை பொறுமையுடன் கையாண்டு தனக்கு கொடுக்கப்பட்ட இவ்வளவு பெரிய திருச்சபையின் தரிசனத்தை திறமையுடன் இயேசு கிறிஸ்துவின் கிருபையுடனும் நிறைவேற்றினார் தீமோத்தேயு.

*இன்றும் வாலிபர்களாகிய நமக்கும் திருச்சபையின் தரிசனத்தை நிறைவேற்றுவதற்கான இப்படிப்பட்ட பணி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பணியை நாம் தீமோத்தேயுவைப் போல சாட்சியுடனும், உண்மையுடனும் செய்ய நம்மை அர்ப்பணிப்போமா? ஆண்டவர் அதற்கு நமக்கு கிருபை தருவாராக.*

- வீர சகாப்தம் தொடரும்...

தகவல்: காட்வின்




TECH - 8

# கைபேசியை கையாளு!

**வணக்கம் நண்பர்களே! "கைபேசியை கையாளு" என்னும் இந்த கட்டுரையின் மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி.**

வேகமாக வளர்ந்து வரும் இந்த தொழில்நுட்ப உலகில், கைக்கு அடக்கமாக உலகையே நம் கையில் கொண்டு வரும் திறன் கொண்ட கைபேசியில், அநேக நன்மைகளும் அதே நேரம் அநேக தீமைகளும் உள்ளன. நம் நேரத்தை திருடும் தேவையற்றக் காரியங்களைத் தவிர்த்து அதிலுள்ள நன்மைகளை இந்த மாதம் நாம் அறிந்து கொள்ளலாம்.

கைபேசியின் மூலம் அநேக காரியங்கள் நாம் செய்தாலும், இந்த நாட்களில் கைபேசி அதிகமாக பயன்படுத்தப்படுவது சமூக வலைத்தலங்களுக்காக மட்டுமே. சமூக வலைத்தலங்களும் காலத்ததிற்கு ஏற்றாற்போல் orkut, facebook, twitter, instagram, threads என வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இவை பெரும்பாலும் பொழுதுபோக்கிற்காகவே பயன்படுத்தப்படுகின்றன. ஆகிலும் சில சமூக வலைத்தளங்கள் நாம் வாழ்க்கையில் உயரவும் அதே நேரத்தில், சரியான பாதையில் செல்லவும் நமக்கு உதவியாய் இருக்கின்றன. அதில் ஒரு வலைத்தளம் தான் linkedin.



லிங்க்ட்இன் என்பது வேலை தேடுபவர்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இணையதளம். இதில் நீங்கள் விருப்பப்பட்ட வேலையைத் தேடலாம். எண்ணற்ற கம்பெனிகள், கம்பெனிகளின் மனிதவள (HR) துறைகள் என அனைத்துமே இந்த சமூக வலைத்தளத்தில் இருக்கும். அதில் நீங்கள் உங்களுக்கென்று ஒரு கணக்குத் துவங்கி, அதில் உங்கள் சுயவிவரங்களை பதிவு செய்தால் போதும். இந்த வலைத்தளத்தில் காணப்படும் கம்பெனிகள் உங்களை நேர்க்காணலுக்கு (interview) அழைத்து, தேர்ச்சி பெறுவோருக்கு வேலை வாய்ப்பளிப்பார்கள். நீங்களும் கூட இந்த linkedin தளத்தில் உங்கள் படிப்பிற்கு ஏற்ற முக்கியமான கம்பெனிகளைத் தேர்ந்தெடுத்து உங்கள் வேலைக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம்.




இந்த காலக்கட்டத்தில் ஒருவர் வேலை தேடுவது முதல் அவர் பணியமர்த்தப்படுவது வரை அனைத்தும் LinkedIn வழியாகவே நடைபெறுகிறது.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு நிறுவனங்களின் மனிதவள (HR) துறைகள், நேர்காணலுக்கு விண்ணப்பதாரரை அழைப்பதற்கு முன், LinkedIn மூலம் அவரது சுய விவரங்களை பார்வையிட்டு, திறமையானவரா என்பதை கண்டறிகின்றனர். Fresherஆக இருந்தாலும் சரி, அனுபவம் நிறைந்தவராக இருந்தாலும் சரி, LinkedIn பக்கத்தில் நமது சுயவிவரங்களை (Profile) தகுந்த கால இடைவெளிகளில் புதுப்பிப்பது அவசியம். ஏனென்றால், LinkedIn சுயவிவரத்தை (Profile) வைத்து தான் நம்மை மதிப்பிடுகிறார்கள்.

**அன்பான வாலிபர்களே, ஒருவேளை நீங்களும் கூட வேலை தேடுபவராக அல்லது வேலை இழந்தவராக என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு இருக்கலாம். கவலை வேண்டாம்! "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (I பேதுரு 5:7) என்று வேத வசனம் சொல்கிறது. எனவே உங்கள் கவலைகளை இயேசுவிடம் வைத்து ஜெபியுங்கள். உங்கள் கைபேசியை வீணான நேரத்திற்கு செலவழிக்காமல், இதுபோன்ற பயனுள்ள காரியங்களுக்கு செலவழியுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்கள் வேண்டுதலைக் கேட்டு ஆசீர்வதிப்பார்.**

அலசல்: கெத்சி கிளார்வின்

உணர்வுகள்



# குழப்பம்

நாம் வாழும் அதிவேக, தகவல் ததும்பிய technology உலகில், குறிப்பாக இளைஞர்களுக்கு குழப்பம் ஒரு இயல்பான காரியமாகும். வேலையை தேர்வு செய்தல், உறவுகளை வழிநடத்தல் அல்லது ஒருவரைப் புரிந்துகொள்வதில் குழப்பம் மிகுந்திருக்கும். குழப்பத்தின் காரணங்கள் மற்றும் விளைவுகளை ஆராய்ந்து, அதனை மேற்கொள்ள நடைமுறை மற்றும் வேத ஆலோசனைகளை வழங்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குழப்பத்தின் காரணங்கள்

**தகவல் மிகை:** இணையம் மற்றும் சமூக ஊடகங்களில் வரும் தகவல்களில் உண்மை எது பொய் எது என்று பிரித்தறிவதில் குழப்பம் உண்டாகிறது.

**வழிகாட்டுதல் இல்லாமை:** சரியான வழிகாட்டி இல்லாததால் முக்கிய முடிவுகளை எடுப்பதில் குழப்பம்.

**வாழ்க்கை மாற்றங்கள்:** கல்லூரி, வேலை என இடம் மாறும்போது குழப்பம் ஏற்படும்.

**ஆவிக்குரிய சந்தேகம்:** விசுவாசம் மற்றும் தேவனின் திட்டம் குறித்து மனதில் சந்தேகங்கள் எழும்போது ஆவிக்குரிய குழப்பம் ஏற்படும்.

## குழப்பத்தின் விளைவுகள்:

**முடிவெடுக்காமை:** குழப்பம் சரியான முடிவெடுக்க முடியாமல் தடுக்கும், பல வாய்ப்புகளை தவறவிட வழிவகுக்கும்.

**கவலை மற்றும் மன அழுத்தம்:** தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மை கவலை மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.



**திறன் குறைவு:** கல்வி மற்றும் வேலைக் காரியங்களில் கவனம் செலுத்த முடியாது.

**உறவுகள் பாதிப்பு:** குழப்பத்தினால் ஏற்படும் தவறான புரிதல்களால் உறவுகள் பாதிக்கப்படும்.

**ஆவிக்குரிய நிலைக் குறைவு:** சந்தேகம் மற்றும் குழப்பம் ஆவிக்குரிய வளர்ச்சியையும், கர்த்தருடனான உறவையும் தடுக்கும்.

## குழப்பத்தைக் கையாள்வது எப்படி?

**ஆலோசனையை நாடுங்கள்:** நம்பகமான வழிகாட்டிகள், போதகர்கள் அல்லது ஆலோசகர்களிடம் பேசுங்கள்.

**ஜெபம் :** கர்த்தரிடத்தில் மனத்தெளிவையும் வழிகாட்டலையும் கேளுங்கள்.

**தகவல் அளவைக் கட்டுப்படுத்துங்கள்:** சமூக ஊடகங்களில் இருந்து இடைவெளி எடுக்கவும்.

**முன்னுரிமைகளை அமைக்கவும்:** உங்களுக்கு மிகவும் முக்கியமானவைகளில் கவனம் செலுத்துங்கள்.

**வேத வசனத்தில் நிலைத்திருங்கள்:** கர்த்தர் தம்முடைய வார்த்தையைக்கொண்டு உங்களோடு இடைபடவும் மனத்தெளிவையும் உண்டாக்கும்.

## குழப்பத்தை மேற்கொள்ள சில வேத வசனங்கள்:

- நாம் சுயமாய் காரியங்களை செய்ய முற்படும்போது குழப்பங்கள் ஏற்படும். எனவே கர்த்தரின் வழிநடத்தலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் போது அவர் நம் பாதைகளை செவ்வைப்படுத்துவார் (நீதி.3:5-6).
- ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபமும் வேண்டுதலும் குழப்பத்தில் சமாதானத்தை கொண்டு வரும் (பிலி.4:6-7).
- 'என்ன செய்வது, என்ன முடிவெடுப்பது' என்று தடுமாறும் வேளையில் அவர் பாதத்தில் அமரும்போது அவருடைய மெல்லிய சத்தம் நம் காதுகளில் கேட்கும் (ஏசா.30:21)

அன்பான வாலிபர்களே! குழப்பம் என்பது வாழ்க்கை பயணத்தில் இயல்பான ஓர் அங்கமாகும். நாம் நமது கேள்விகளை, சந்தேகங்களை அவரிடம் கேட்கும்போது, அவர் நமக்கு ஆலோசனைக் கொடுத்து, நமது குழப்பங்களுக்கெல்லாம் பதில் தந்து, நம்மை வழி நடத்துவார்!





"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும்,
ராஜ்யத்துக்கு விரோதமாய்
ராஜ்யமும் எழும்பும்;..." (மத்தேயு 24:7).

# எழுப்புதலையும் உபத்திரவத்தையும் பிரிக்க முடியாது!

பகுதி - 2

எழுப்புதலின் செய்தி: ஜோசாலி



மெய்தி, குக்கி இன மக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக மணிப்பூர் மாநிலம் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக வன்முறைகளை சந்தித்து வருகிறது.

கடந்த மாதம் ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பி, பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒருவரையொருவர் தாக்கி மரணங்கள் சம்பவித்ததைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் மதவாதிகள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எழும்பி சபைகளை துன்புறுத்துவதைக் குறித்துப் பார்க்க இருக்கிறோம்.

மணிப்பூரில் மாதக்கணக்கில் நீடித்து வரும் இந்த வன்முறைகளில் வீடுகள், விவசாய நிலங்கள், வணிக வளாகங்கள் என ஏராளமானவை எரிந்து சாம்பலாகியுள்ளன. இச்சூழ்நிலையில் 50,000க்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இந்த வன்முறையில் சுமார் 400 தேவாலயங்கள் எரிக்கப்பட்டதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அநேக திருச்சபை மக்கள் துன்புறுத்தப்பட்டதோடு, நூற்றுக்கணக்கான சபைகள் இடித்து தரை மட்டமாக்கப்பட்டன.

பழங்குடியினர் வாழும் மலைப்பகுதியில் ஏராளமான கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர். இங்கு ஏராளமான கிறிஸ்தவ தேவாலயங்களும் இருக்கின்றன. வன்முறையின்போது மதவாதிகள் கிறிஸ்தவ தேவாலயங்களை குறிவைத்து நொறுக்கியுள்ளனர். சில ஆலயங்களை தீ வைத்து எரித்துள்ளனர். குக்கி இன மக்களின் தேவாலயங்கள் மட்டுமல்ல, மெய்தி இன கிறிஸ்தவர்களின் நூற்றுக்கணக்கான தேவாலயங்களும் சூறையாடப்பட்டு, தீக்கிரை யாக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் சம்பவிக்க காரணம் என்ன? இது எழுப்புதலின் ஆரம்பம்...!!

இந்நாட்களில் மணிப்பூரில் சபைகள் துன்புறுத்தப்பட்டது போல் அப்போஸ்தலர் நாட்களிலும் சவுல் என்ற மனிதன் சபைகளை துன்பப்படுத்தினான் என்று அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தை வாசிக்கும்போது தெரிந்து கொள்ள முடிகிறது.

சவுல், கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துதல், சபைகளை பாழாக்குதல், போன்ற பல காரியங்களுக்குக் காரணமாய் இருந்ததோடு, ஸ்தேவான் கொல்லப்படுவதற்கும் உடந்தையாயிருந்தவன் (அப்.8:1). இந்த சவுலைத்தான் ஆண்டவர் சந்தித்தார். இவர் யார் என்று சவுல் வியந்தபோது, ''நீ



துன்பப்படுத்துகிற இயேசு நானே'' என்று தன்னை இயேசு அறிமுகம் செய்துகொண்டார் (அப் 9:5).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, சவுலை தம் வெளிச்சத்தினால் சந்தித்து, அவனோடு பேசினார். அனனியா என்னும் சீஷன் மூலம், சவுலைப் பார்வையடையச் செய்து, பரிசுத்த ஆவினால் நிரப்பி ஞானஸ்தானம் கொடுக்க வைத்தார். அதற்கு பிறகு சவுல் தாமதமின்றி கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்று பிரசங்கிக்கத் தொடங்கினான். அன்று மனமாற்றமடைந்த சவுல், கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்தார். சபையை துன்புறுத்திய சவுல், மனம்மாறிய பின் பவுலாக மாறினார். இவர் இறுதிவரைக்கும் பின்வாங்காமல், இயேசுவுக்காய் தான் பயணம் செய்த இடங்களில் சபைகளை ஆரம்பிக்கவும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவும் ஆரம்பித்தார்.

**இதேபோல், இன்றைக்கும் மணிப்பூரில் உள்ள சபைகளைத் துன்பப்படுத்துகிற சவுல் போன்ற மனிதர்களை, கர்த்தர் தமது வெளிச்சமாகிய வசனத்தினால் சந்தித்து அவர்களையும் பவுலாக மாற்றுவார்! அதுமட்டுமின்றி அனனியா போன்ற சீஷர்களையும் மணிப்பூரின் எழுப்புதலுக்காக பயன்படுத்துவார். பவுலுக்குள் ஏற்பட்ட அந்த மனமாற்றம் மணிப்பூரில் உள்ள கலகக்காரர்களிடமும் ஏற்பட்டு, அந்த மாநிலத்தில் அநேக பவுல்கள் எழும்பும்போது எழுப்புதலை நாம் நிச்சயம் பார்க்க முடியும்!**



# எழுப்புதலை பற்றவைப்போர்...

(ஆதி அப்போலஸ்தலர் நாட்களில் நடந்த அற்புதங்கள் இந்நாட்களில் Igniters மூலமாக நடைபெறுகிறது)

## திருநெல்வேலி மண்டலம்



நாங்கள் கிராம ஊழியத்திற்கு சென்றபோது, ''புறமதத்தினருக்கு இங்கு அனுமதி இல்லை'' என்று போர்டு வைக்கப்பட்டிருந்த ஊரில் எங்கள் குழுவினர் எங்களை விட்டு சென்றார்கள். ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு கிராமமாக காணப்பட்டது. சிறிது தூரம் நடந்து சென்றபோது 2 பாட்டிமார்கள் ஒரு திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ''இயேசு உங்களை நேசிக்கிறார்'' என்று சொல்லி கைப்பிரதி கொடுத்து கொண்டு இருக்கும்போது, ''வியாதிஸ்தர்களுக்காக ஜெபியுங்கள்'' என்று ஆவியானவர் தன்னிடம் பேசுவதாக என்னுடன் வந்த அண்ணன் சொன்னார். உடனே அந்த பாட்டிமாரிடம் ''இந்த கிராமத்தில் யாராவது வியாதியோடு இருக்கிறார்களா? அவர்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்'' என்று கேட்டோம். உடனே அவர்கள் ''அந்த கடைசி வீட்டில் ஒருவர் அநேக நாட்களாய் வியாதியோடு இருக்கிறார்'' என்று சொன்னார்கள்.

நாங்கள் அங்கு சென்றபோது அந்த ஐயா **urine bag**உடன் படுத்திருந்தார். ''நான் இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டேன்'' என்று என்னுடைய சாட்சியை சொல்லி சுவிசேஷம் அறிவித்து நாங்கள் இருவரும் அவருக்காக ஜெபித்தோம். ஜெபித்துக் கொண்டிருக்கும்போது ஆவியானவர் இறங்கி ஒரு தரிசனத்தைக் காண்பித்து, ''அவரை எழுந்து நடக்க சொல்'' என்று சொன்னதும், அந்த ஐயாவின் கரத்தைப் பிடித்து ''எழுந்து நடவுங்கள்'' என்று சொன்னவுடன் அவர் எழுந்து நடந்தார். வாய் கோணி பேசாமல் இருந்தவரிடம் ''வாயைத் திறந்து இயேசு என்று சொல்லுங்கள்'' என்று சொன்னவுடன் இயேசு என்று சத்தமாக கூப்பிட்டார். நாங்கள் ஜெபித்து விட்டு வந்து ஒரு வாரம் கழித்து விசாரித்தபோது, அவர் முற்றிலும் சுகமாகி வேலைக்கு செல்வதாக கூறினார்கள். இன்றைக்கு அந்த குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொண்டு, சபைக்கு சென்றுக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.!!


MOUNT SINAI 2024
(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)
அக்டோபர் 31
வியாழக்கிழமை (தீபாவளி தினத்தன்று)
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
சென்னை மண்டலம்
பேர்ணாம்பட்டில்...
சகோ. சாம் ஜெபராஜ்
எழுப்புதல் ஜெப கூடாரம்
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி .கோட்ட ரோடு
தொடர்புக்கு : 99408 54125
சென்னையில்...
பாஸ்டர் சரவணன்
உலக எழுப்புதல் ஜெப மையம்
பிரின்ஸ் குஷால் டவர்ஸ்
7வது மாடி, B -Wing
மவுண்ட் ரோடு
தொடர்புக்கு : 9488475315
வேலூரில்...
சகோ. சதீஷ்
உலக எழுப்புதல் ஜெப மையம்,
அஜந்தா மஹால்,
வெஸ்ட் காந்தி நகர்,
கனரா வங்கி அருகில்.
தொடர்புக்கு : 94429 79556
செங்கல்பட்டில்...
பாஸ்டர் லூக்காஸ் சேகர்
மிராக்கிள்
ஷெக்கினா அசெம்பிளி
ஜோதிபா அவென்யூ
திருகழுக்குன்றம் ரோடு
தொடர்புக்கு : 9597588831 | 9710809626 | 9488475315
இராணிபேட்டில்...
பாஸ்டர் இளவரசன்
உலக எழுப்புதல் ஜெபமையம்,
ரயில்வே ஸ்டேஷன்,
SMH பின்புறம்,
சீயோன் நகர்,
தொடர்புக்கு : 9500283179
திருநெல்வேலி மண்டலம்
நாலுமாவடியில்...
டாக்டர் அன்புராஜன்
தேவனுடைய கூடாரம்
நாலுமாவடி
தொடர்புக்கு : 9750955547 | 04639- 353535
ஜெபமலையில்...
சகோ. ஜோஷ்வா எஸ்டோவ்
கீழமாதாபுரம்,
தென்காசி - அம்பை மெயின் ரோடு,
தென்காசி மாவட்டம்
தொடர்புக்கு : 8300131000 | 9750955548
திருநெல்வேலியில்...
பாஸ்டர் ராபர்ட் ரொனால்ட்
சாரா டக்கர் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி
பாளையங்கோட்டை
தொடர்புக்கு : 9047480484 | 9750955548
கோவில்பட்டியில்...
பாஸ்டர் பென்னட் கிறிஸ்டோபர்
நம்பிக்கையின் கூடாரம்
ஜெப வீடு,
பாண்டவர்மங்கலம்,
தொடர்புக்கு : 9787322334 9677858766
சங்கரன்கோயிலில்...
சகோ. ஜூடா பென்னி ஹின்
உலக எழுப்புதல் ஜெப மையம்,
காங்கிரஸ் பொன்விழா மைதானம்,
ஷக்கினா ஹால் பின்புறம்,
முல்லை நகர்,
இராஜாபாளையம் ரோடு
தொடர்புக்கு : 9750955548 | 8344949555
கேரளா - நெய்யாற்றின்கரையில்
சகோ. அந்தோணி தாஸ்
எல்-எல்யோன் சர்ச், T.J ஆடிட்டோரியம் அருகில் ,
தொழுக்கல், நெய்யாற்றின்கரை, திருவனந்தபுரம்
தொடர்புக்கு : 8281514822, 9961794754

# கடலூர் மண்டலம்

## பாண்டிச்சேரியில்...



சகோ. D. ஜெபஸ்டின் சாமுவேல்

உலக எழுப்புதல் ஜெப மையம்
2, நாகதமன் சாலை,
கோட்டுப்பாளையம்

தொடர்புக்கு : 8344433800

## கடலூரில்...



சகோ. டேவிட் ஜெபசிங்

உலக எழுப்புதல் ஜெப மையம்
93, நேதாஜி ரோடு,
மணிக்கூண்டு எதிர்புறம்
மாஞ்சக்குப்பம்

தொடர்புக்கு : 9965144000

## திருவாரூரில்...



சகோ. நல்லதம்பி சார்லஸ்

இடம் பின்னர்
அறிவிக்கப்படும்

தொடர்புக்கு : 9976766322

## விழுப்புரத்தில்...



சகோ. ஜோசப் சுப்பிரமணி

உலக எழுப்புதல் ஜெப மையம்
முதல் மாடி, H.H. காம்ப்ளக்ஸ்
நம்நாடு துணிக்கடை எதிர்புறம்
216 நேதாஜி ரோடு

தொடர்புக்கு : 8870517324 | 8344411022

# கோவை மண்டலம்

## ஈரோட்டில்...



சகோ. ஜெபசிங்

இடம் பின்னர்
அறிவிக்கப்படும்

தொடர்புக்கு : 9750722000

## கோவையில்...



சகோ. சதீஷ்

இடம் பின்னர்
அறிவிக்கப்படும்

தொடர்புக்கு : 8903405315

## திருப்பூரில்...



சகோ. டேவிட் கணேசன்

TELC அருள்நாதர் ஆலயம்,
சபாபதிபுரம் ,

தொடர்புக்கு : 9442082200

## தாராபுரத்தில்...



சகோதரி அனிதா பானு,
சகோதரி வசந்தி பால்

பிஷப் தோர்ப் கல்லூரி,
தாராபுரம்

தொடர்புக்கு : 8248283373

# மதுரை மண்டலம்

## இராமநாதபுரத்தில்...



சகோ. சந்தானம்

வலம்புரி மஹால்,
பழைய பேருந்து நிலையம் அருகில்,
இரயில்வே பீடர் ரோடு

தொடர்புக்கு : 9750955548

## தேனியில்...



சகோ. ரூபன்

தாவீதின் கூடாரம் ஆராதனை மையம்
ஜே.டி.என். காம்ப்ளக்ஸ்,
வைகை அணை ரோடு,
பெரியகுளம்,

தொடர்புக்கு: 8489811498,
9750955548, 9488145305

## மதுரையில்...



பாஸ்டர் ஜாக் ராபர்ட்

அல்லேலுயா டவர்,
நல்ல சமாரியன் சபை
47,அழகர் நகர் மெயின் ரோடு,
5வது தெரு, கே.புதூர்

தொடர்புக்கு: 9750955548

## திண்டுக்கல்லில்...



சகோ. சாம் மோசஸ்
சகோதரி டிரினிட்டா சாம்

TELC மண்டபம்
மெக்கில்ஸ் ரோடு

தொடர்புக்கு: 6382392446 | 9043422612

# மஹாராஷ்டிரா - மும்பையில்...



சகோ. அவினாஷ்

நவம்பர் 1
(வெள்ளி கிழமை)

Morning Star School, அசோக் மில் காம்பவுண்ட்,
சீயோன் பந்த்ரா லிங்க் ரோடு,,
ஷஹீல் ஹோட்டல் எதிர்புறம், தாராவி

தொடர்புக்கு :
9004882470 | 8082410410 |
9664050567

# நிசமா நரகம்!

பகுதி - 6

எச்சரிப்பின் செய்தி: டேனி.

Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு செய்யும் சூழ்ச்சி தான் நம்மை பாவத்தில் விழச்செய்வது. அதில் ஒரு சூழ்ச்சியாகிய இடறலைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக கற்றுக் கொண்டோம். இதுவரைக்கும், நாம் செய்யும் எந்தெந்த பாவங்கள் நம்மை நரகத்திற்கு கொண்டு செல்லும் என்று பார்த்தோம். இந்த மாதம் எதை செய்யாமல் இருந்தால் பரலோகம் போக முடியாது என்று பார்ப்போம்.

## ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாதிருத்தல்

**"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:5)** என்று இயேசு கிறிஸ்து பரிசுத்த வேதாகமத்தில் கூறியுள்ளார்.



## ஜலத்தினால் பிறத்தல்

ஜலத்தினால் பிறப்பது என்றால் ஞானஸ்நானம் எடுப்பது. ஞானம் அடைந்த பிறகு எடுக்கிற ஸ்நானம் தான் ஞானஸ்நானம். எப்போ ஞானம் அடைய முடியும்? வேதம் சொல்கிறது, **"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி. 1:7).** எது கர்த்தருக்கு பயப்படும் பயம்? **"தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்" (நீதி. 8:13).** ஞானஸ்நானம் என்பது பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைப்பது. பாவத்தை விட்டு மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பிறகு, தண்ணீரில் மூழ்கி எழுவதின் மூலம், பழைய மனிதனாகிய இந்த பாவ சரீரம் அடக்கம்பண்ணப்பட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனாய் உயிர்த்தெழுவதையே ஞானஸ்நானம் குறிக்கிறது.

பாருங்கள், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில் 'மனந்திரும்பி' ஞானஸ்நானம் பெறுங்கள் என்று சொல்கிறார் **(அப். 2:38).** ஆனால் இந்த காலத்தில் இரட்சிக்கப்படாமலேயே அநேகர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். திருமணத்தை அரசாங்கத்தில் பதிவு செய்ய **Baptism Certificate** அவசியம் என்பதால் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். ஒரு சிலர் 18 வயது ஆகிவிட்டது என்பதால் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் பெற்றோர்கள். பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டார்களா இல்லையா என்று அறியாமலேயே ஞானஸ்நானம் எடுக்க கட்டாயப்படுத்துகிறார்கள். இன்னும் சிலர் ஞானஸ்நானம் எடுக்கவில்லை என்றால் பரலோகம் போக முடியாது என்று பிரசங்கத்தில் கேட்டு பயந்து போய், மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். ஒருசில சபைகளில் குழந்தைகளின் மேல் தண்ணீர் தெளித்து, தெளிப்பு ஞானஸ்நானம் கொடுப்பார்கள். அவையெல்லாம் வேதத்திற்கு புறம்பானவை. வேதத்தின்படி மூழ்கிதான் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, சிலர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டும், ஞானஸ்நானம் எடுக்காமல் தாமதித்துக் கொண்டிருப்பார்கள். நாம் இரட்சிக்கப்பட்ட உடனே ஞானஸ்நானம் எடுப்பது அவசியம். சவுல் என்கிற பவுல் இரட்சிக்கப்பட்ட உடனே தாமதமின்றி ஞானஸ்நானம் பெற்றார் **(அப். 9:18).**

இரட்சிக்கப்பட்டும் ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் பரலோக பாக்கியமாகிய நித்திய ஜீவனை இழக்கிறார்கள் **(யோவான் 3:5).** ஒருவேளை இரட்சிக்கப்பட்டும் ஞானஸ்நானம் எடுக்காமல் இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்களா? உங்களோடு தேவன் பேசுகிறார் என்பதை உணர்ந்து உடனே ஞானஸ்நானம் எடுங்கள்.

## ஆவியினால் பிறத்தல்

அநேகர் ''நான் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் எடுத்துவிட்டேன்'' என்று அதோடு திருப்தி அடைந்து விடுகின்றனர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு மனிதன் ஜலத்தினால் பிறந்தால் மட்டும் போதாது, ஆவியினால் பிறப்பதும் மிகவும் அவசியம். அதாவது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்து பரமேறி போகும்போது, ''யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான், நீங்கள் சில நாளைக்குள்ளே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்'' என்று சீஷர்களிடம் சொன்னார். அவர் சொன்னது போலவே, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பலமாய் இறங்கி எல்லோரையும் ஆவியினால் நிரப்பினார். அவர்கள் ஆவியினால் பிறந்தார்கள். ஆதித்திருச்சபையினர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு, பற்பல பாஷைகளை பேசுதல், கிறிஸ்துவை தைரியமாக பிரசங்கித்தல், அற்புத அடையாளங்களை செய்தல், ஒருமனதோடு ஐக்கியமாக சுயநலமில்லாமல் வாழ்தல், உபத்திரவங்களைத் தாங்கி விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருத்தல், புதிய திருச்சபைகளை உருவாக்க மிஷனரி பயணங்களை மேற்கொள்ளுதல் போன்ற அநேக மாற்றங்கள் உண்டாயின.

## இந்த பரிசுத்த ஆவியின் பயன்கள் தான் என்ன?

- பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் வரும்போது நாம் பெலனடைவோம் **(அப் 1:8).**
- அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், நம்மைக் கண்டித்து உணர்த்துவார் **(யோவான் 16:8).**
- அவர் நாம் செய்ய வேண்டியது இன்னதென்று நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் போதித்து நடத்துவார் **(யோவான் 14:26, 16:13).**
- அவர் நம்மை பரிசுத்தமாக்குவார் (2 தெச 2:13). எல்லாக் கட்டுகளிலிருந்தும் நம்மை விடுவிப்பார் (2 கொரி. 3:17). சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11)
- நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்து, நமக்காக வேண்டுதல் செய்கிறார் **(ரோமர் 8: 26).**
- நாம் கிறிஸ்துவை வெளிப்படுத்த ஆவியின் கனிகள் மற்றும் வரங்களினால் நம்மை நிரப்புகிறார்.

## சரி... இந்த பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?



மான்கள் நீரோடைக்காக வாஞ்சிப்பதுபோல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள தாகம் வேண்டும் **(யோவான் 7:37).**

தேவன் மேல் விசுவாசமாயிருக்க வேண்டும் **(யோவான் 7:38)**

பிள்ளை தகப்பனிடம் உரிமையோடு கேட்பது போல் கேட்க வேண்டும் **(லூக்கா 11;9-13).**

தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் **(அப் 5;32).**

ஒருவேளை நீங்கள் இன்னும் ஆவியினால் பிறவாதிருந்தால், பரிசுத்த ஆவியானவரை வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அன்பான வாலிபர்களே! நாம் வாழ்கின்ற இந்த கடைசி காலத்தில், "ஞானஸ்நானம் தேவையில்லை, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எல்லாம் கிடையாது என்றும், நாம் என்ன பாவம் செய்தாலும் பரலோகம் சென்று விடலாம்" என்றும், போதிக்கிற ஒரு கூட்டம் இருக்கிறது. இன்னும் சில இடங்களில் போலியான அபிஷேகத்தைப்பற்றி போதிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் சொல்கிறது. பிசாசானவன் மிகவும் தந்திரமானவன். வேதவசனத்தை புரட்டுகிற இப்படிப்பட்ட கள்ள ஊழியர்களைக் கொண்டு நம்மை வஞ்சித்து, பரலோக ராஜ்யத்தை நாம் சுதந்தரிக்க கூடாதென்று அநேக சூழ்ச்சிகளை செய்வான். தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து வேதம் கூறும் சத்தியங்களுக்கு கீழ்ப்படிந்து விலைமதிப்பில்லா உங்கள் ஆத்துமாவை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.**

**''ஆண்டவர் செய்யக்கூடாதென்று சொல்லுவதை செய்வது மட்டும் பாவமல்ல, செய்ய வேண்டும் என்று சொல்லுவதை செய்யாமலிருப்பதும் பாவமே''.**

முகப்பு செய்தி: சதீஷ்



# விசாரிக்கும் தேவன்!

**இன்று நாம் வாழும் இந்தக் காலகட்டத்தில் சொந்தக் குடும்பத்தினரையே ஒருவரையொருவர் சந்திக்கவோ, விசாரிக்கவோ நேரம் இல்லாமல் ஓடிக் கொண்டு இருக்கிறோம். அநேக பெற்றோர் விசாரிப்பற்று கைவிடப்பட்ட நிலையில் முதியோர் இல்லங்களிலும், பிள்ளைகள் கவனிப்பாரின்றி அனாதை ஆசிரமங்களிலும் இருப்பதை பார்க்க முடிகிறது. இப்படி உலக மனிதர்களால் கைவிடப்பட்டவர்களை விசாரிக்கவோ, அன்பு செலுத்தவோ யாருமே இல்லை என்பது தான் உண்மை. நாம் நேசிக்கும் மனிதர்கள் நம்மை விசாரிக்காமல் விடலாம், ஆனால் நம்மை விசாரிக்கும் தேவன் ஒருவர் உண்டு; அவர் நம்முடைய எல்லா காரியங்களையும் விசாரித்து பதில் தருகிறவர்.**

பெதஸ்தா குளத்தினருகே வியாதியாய் இருந்த மனுஷன் தன்னுடைய உறவுகளால், வீட்டாரால், நண்பர்களால் கைவிடப்பட்டு உதவியற்ற நிலையில் விசாரிப்பற்று இருந்தான். ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல, ஏறக்குறைய 38 வருடங்கள் அவன் மீது கரிசனை காட்டவோ, விசாரிக்கவோ ஆளின்றி அன்பிற்காக ஏங்கித் தவித்தான். எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்த அவனை, இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: ''சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா'' என்று கேட்டார் **(யோவான் 5:6).** அவன் இயேசுவைத் தேடாமல் இருந்தும், இயேசு அவனிடத்தில் சென்று, அன்பாய் விசாரித்து அவனுடையப் பாவங்களை மன்னித்து, அவன் வியாதியின் சிறையிருப்பை மாற்றினார்.



விசாரிக்க ஆளில்லாமல் கைவிடப்பட்ட நிலமையிலிருந்த அவனை இயேசு தேடிச் சென்று அவனுடைய சூழ்நிலையை மாற்றியது போல, ''என்னை விசாரிக்கவும், அன்பு செலுத்தவும் யாருமே இல்லையே'' என்று யோசித்துக் கொண்டு இருக்கும், உங்களை கர்த்தர் விசாரித்து சூழ்நிலையை மாற்றுவார்.

ஆபிரகாம் ஒரு நாள் தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை அழைத்து, கொஞ்சம் அப்பமும், தண்ணீரும் கொடுத்து அவளையும் பிள்ளையையும் தன் வீட்டிலிருந்து வெளியேற்றினான். எதிர்பாராத வேளையில் ஆபிரகாம் எடுத்த இந்த முடிவு ஆகாரின் மனதில் அநேக கேள்விகளை எழுப்பியிருக்கக் கூடும். தன்னையும் பிள்ளையையும் நேசித்தவர் திடீரென கைவிட்டு விட்டாரே, அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல், பெயர்செபா

வனாந்திரத்தில் அலைந்து திரிகிறாள். ஆகாருக்காக ஆபிரகாமிடத்தில் வழக்காடவும் விசாரித்து அன்பு செலுத்தவும் எந்தவொரு மனுஷனும் முன் வரவில்லை. தான் நம்பியிருந்த மனிதர்களால் கைவிடப்பட்டு திக்கற்ற நிலமையில் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த ஆகாரை கர்த்தர் கூப்பிட்டு, **“ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டுபோ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார்” (ஆதி. 21:17,18).** இப்படி சொந்த குடும்பத்தால் கைவிடப்பட்டு தனக்கு உதவி செய்ய யாருமே இல்லையே என்று, தன் பிள்ளையின் எதிர்காலத்தைக் குறித்து பாரத்தோடு இருந்த ஆகாரை கர்த்தர் அன்போடு விசாரித்து, அவளின் சூழ்நிலையை மாற்றினார்.



நம்மை சுற்றி இருக்கிற மனிதர்கள் நம்மை விட்டு விலகி விடலாம், கைவிடலாம். ஆனால் **“நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்” (யோவான் 14:18)** என்று சொன்ன இயேசு என்றைக்கும் நம்மை கைவிடமாட்டார். எல்லோரும் இருந்தும் உதவி செய்ய ஒருவரும் இல்லை என்ற வேதனையோடு உள்ளீர்களா? உங்களை விசாரித்து உதவி செய்ய இயேசு இருக்கிறார், ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்.

ஒருமுறை ஊமையான ஒரு ஆவி பிடித்த மகனை, தகப்பன் ஒருவர் இயேசுவினிடத்தில் கொண்டு வருகிறார். அவன் இயேசுவிடம் வந்தவுடனே அந்த ஆவி அவனை அலைக்கழித்து கீழே தள்ளியது. இதைகண்ட இயேசு, **“அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று” (மாற்கு 9:21)** என்று கேட்டு விசாரித்து அந்த வாலிபனுக்குள் இருந்த அசுத்த ஆவியை விரட்டினது மட்டுமின்றி அவன் செவிகள் திறக்கும்படியாகவும், கட்டப்பட்ட வாலிபனின் நாவு பேசும்படியாகவும் செய்தார். உலகத்தாலும் மனிதர்களாலும் கைவிடப்பட்ட ஜனங்களை இயேசு விசாரித்து அவர்கள் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்தார்.

**தேவன் நம்மை விசாரிக்கிறவரானபடியால் நமது கவலைகளையெல்லாம் அவர் ஏற்றுக் கொள்வார். நமது விசுவாசத்தை, நம்பிக்கையை அவர்மேல் வைத்து, அவரையேப் பற்றிக்கொண்டால் நிச்சயம் அவர் நம்மை கைவிடவே மாட்டார். நமக்கு நேரிடும் துன்பங்கள் எதுவுமே, நம்முடைய நண்பர்களுக்கோ, சொந்தங்களுக்கோ தெரியாமல் இருக்கலாம். ஆனால் இயேசு நமது துன்பங்களை அவர் துன்பமாக ஏற்றுக்கொண்டு அக்கறையுடன் நமக்கு உதவி செய்வார்.**

## மழைக்காலத்தில் தவிர்க்க வேண்டிய ஆரோக்கியமற்ற உணவுகள்

- **வறுத்த உணவுகளைத் தவிர்க்கவும்**
- **காய்கறிகளைக் கழுவி சமைக்கவும்**
- **குளிர்ந்த உணவைத் தவிர்க்கவும்**
- **கடல் உணவுகள் சாப்பிடுவதை நிறுத்துங்கள்**
- **வெளி உணவுகளை சாப்பிடுவதை நிறுத்துங்கள்**





தகவல்: வயலா

# NISUIN BERIYTH

## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 8

இளம் வாலிப கண்மணிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். திருமண உடன்படிக்கை என்ற இந்த தொடரின் மூலம் கடந்த 7 மாதங்களாக திருமணத்திற்கென ஆயத்தப்படும் வாலிபர்களுக்கான பல ஆலோசனைகளைப் பெற்று வருகிறீர்கள். இம்மாதமும் "திருமணத்திற்காக காத்திருப்பவர்கள் கண்டிப்பாக செய்யக் கூடாதவை" பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



## திருமணத்தில் சுயநலம்

அநேக வாலிபப் பிள்ளைகள் தங்களது சந்தோஷத்தை மட்டும் பெரிதுபடுத்தி, தாங்களாகவே வாழ்க்கைத் துணையைத் தெரிந்துகொண்டு பிறந்த வீட்டை விட்டு வெளியேறி விடுகின்றனர். இதினிமித்தம் மீண்டும் பெறவே முடியாத குடும்ப மகிழ்ச்சி, ஒற்றுமை, நற்பெயர் போன்ற அநேகக் காரியங்களை இழக்க நேரிடுகிறது.

எங்கள் வீட்டினருகே வசித்த ஒரு குடும்பத்தில் மூன்று பெண் பிள்ளைகள். தகப்பனார் ஒரு அலுவலகத்தில் பியூனாக பணியாற்றி வந்தார். தாயார் துணி தைத்துக் கொடுத்து, அதில் வரும் எளிய வருமானத்தில் மூன்று பிள்ளைகளை வளர்த்து, படிக்க வைத்தார்கள். மூத்தப் பெண் கல்லூரிப் படிப்பு முடித்து, நல்ல வேலைப் பார்த்து, குடும்பச் சுமையை பகிர்ந்துக்கொள்வாள் என்று எண்ணி தங்கள் கஷ்டங்களைச் சொல்லாமல் படிக்க வைத்தனர். ஆனால் அந்த மூத்த மகளோ தனது குடும்ப சூழ்நிலையையோ, தகப்பனின் பாரத்தையோ குறித்தும் சற்றும் சிந்திக்காமல், தன்னைக் குறித்து யாரும் கவலைப்பட வேண்டாம் என்று ஒரு பேப்பரில் எழுதி வைத்து விட்டு ஒரு நபருடன் சென்றுவிட்டாள். முழு குடும்பமும் துயரத்துக்குள்ளானது. ஏறக்குறைய மூன்று மாதமளவும் அந்த வீட்டிலிருந்து இரவெல்லாம் அழுகுரல் கேட்டுக் கொண்டே இருந்தது. அந்த வீடே நரகமானது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அடுத்தப் பெண்ணிற்கு திருமண ஏற்பாடு செய்த போது அந்த மாப்பிள்ளை வீட்டார், ''எங்களுக்கு உங்கள் பெண்ணைப் பிடித்து இருக்கிறது; ஆனால் உங்கள் மூத்த மகள் ஓடிப்போனதாக கேள்விப்பட்டோம், எங்களுக்கு இந்தக் குடும்பத்தில் பெண் வேண்டாம்'' என்று சொன்னார்கள்.



தாயும், தகப்பனும் இரண்டு பெண் பிள்ளைகளும் பட்ட வேதனை, வடித்தக் கண்ணீருக்கு அளவே இல்லை.

பிள்ளைகளே, இந்த வாலிப பெண் தன் மதியீன செயலினால் தன்னைப் பெற்ற தாயும் தகப்பனும் வாழ்நாளெல்லாம் நிந்தனை அவமானத்தோடு அணு அணுவாய் சாகும்படி செய்து விட்டு, தனது உடன் பிறப்புகளின் நல்வாழ்வையும் கேள்விக் குறியாக்கி விட்டு, நல்வாழ்வு வாழ முடியுமா? இப்படி ஒரு வாழ்க்கை தேவை தானா? நீங்களே பதிலளியுங்கள்.

**“நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது” (நீதி 17:13)** என்று வேதம் சொல்கிறது. பெற்றோர் செய்த நன்மைகளையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் தீமையை இழைத்து செய்யும் இத்தகைய திருமணத்தில் ‘சுயம்’ இருக்கலாம் ‘நலம்’ எப்பொழுதும் இருக்காது.



## கூட்டு வாழ்வு

கூட்டு வாழ்வு (Living Together) என்பது திருமணம் ஆகாத எதிர்பாலர் இருவர் தம்பதிகள் போல் கூடி வாழும் ஒரு மனித ஏற்பாடாகும். திருமணம் என்பது காலாகாலத்திற்கும் உடைக்க முடியாத உறுதியான பந்தம் ஆகும். இதற்கு முற்றிலும் மாறுபாடானதாக எந்த நொடியில் வேண்டுமானாலும் முறித்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரமாக ‘டேட்டிங்’ என்ற செயல்முறை அறிமுகமாகி பரவி வருகிறது. ஒன்றாக வேலை பார்ப்பவர்கள் அலுவலக பயன்பாட்டிற்காக, வசதிக்காக, பணத்தை சேமிப்பதற்காக என்று கூறி ஒன்றாக கூடி வாழ்கிறார்கள். இந்த மனித ஏற்பாடு விபச்சாரம் என்ற பாவத்திற்கே வழி வகுக்குகின்றது. தேவன் ஏற்படுத்திய ‘திருமண உடன்படிக்கைக்கு இது முற்றிலும் முரணானது. வானத்தையும் பூமியையும் அதன் அண்ட சராசரங்களையும் உண்டாக்கிய தேவனின் கட்டளையை மீறி ஒரு மனிதன் வாழ முயற்சிக்கும் போது அவனை காப்பாற்ற யாரால் முடியும்?

**வேலை தேடி மற்ற மாநிலத்திற்கும் அயல் நாடுகளுக்கும் செல்லும் வாலிப பிள்ளைகளே, எச்சரிக்கையுடன் செயல்படுவீர்களாக!**

**திருமண பருவத்தில் செய்யக்கூடாத மற்ற காரியங்களுடன் NISUIN BERIYTH தொடரும்.**



# என்னால் முடியும்; எல்லாம் முடியும்!

சாதனை: சுமா

**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! நம்முடைய இலக்கை தொட நமக்கு பணமோ, மனிதர்களோ தேவையில்லை. ஆனால் "என்னால் எல்லாம் முடியும்" என்ற விடாப்பிடியான தன்னம்பிக்கையும், மனஉறுதியும் இருந்தால் நம்முடைய இலக்கை எளிதாக அடைந்துவிட முடியும். என்னால் முடியும் என்று நம்பி வெற்றி கண்ட இளம் சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக!**







சென்னைப் பட்டணத்தில் ஏழை குடும்பத்தில் டிராக்டர் ஓட்டுநரின் மகனாக பிறந்தவர் ஆனந்த் மேகலிங்கம். எளிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஆனந்த் பெரிய கனவுகளைப் பேணியிருந்தார். பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் Electrical and Electronic Engineering தேர்ந்தெடுத்து படிக்கத் துவங்கியவர் முதல் செமஸ்டரின் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியுற்றார். இதனால் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் வீணாக போயின. எனினும் விளையாட்டில் அவர் கொண்டிருந்த ஆர்வம் மற்றும் திறமையால் ஒரு தனியார் கல்லூரியில் sports quotaவில் இடம் கிடைத்து, Aeronautical இன்ஜினியரிங் படிப்பை தேர்வு செய்து படிக்க ஆரம்பித்தார்.

ஆனந்த் படிக்கும்போதே கிளைடர், பேப்பர் பிளேன் போன்றவற்றை தயாரித்து பல போட்டிகளில் வெற்றி பெற்றார். அதில் கிடைத்த பணப் பரிசுகளைக் கொண்டு மேலும் பல projectகளை செய்தார். இப்படி அவர் 500க்கும் மேற்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். APJ அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளையிடமிருந்து இளம் விஞ்ஞானிக்கான விருதை புதுச்சேரி முதலமைச்சரிடமிருந்து பெற்றுள்ளார்.



கூறுவதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. ராமேஸ்வரத்தில் இருந்து 2022–ஆம் ஆண்டில் 100 செயற்கைக் கோள்களை ஏவியதற்காக Space zone India பிரதமரால் பாராட்டப்பட்டது. 2023ம் ஆண்டு இந்தியாவின் முதல் Hybrid Rocketஐ சென்னையிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

தற்போது Space zone India, விமானம் மற்றும் ராக்கெட் தொழில்நுட்பத்தில் புதிய பட்டதாரிகள் (freshers) மற்றும் Ph.D பெற்றவர்கள் உட்பட 28 உறுப்பினர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவைக் கொண்டுள்ளது. நிறுவனம் R&D, ராக்கெட் தயாரிப்பு மற்றும் சோதனைக்கான தனிப் பிரிவுகளுடன் கூடிய அதிநவீன வசதிகளோடு செயல்பட்டு வருகிறது.

ஆனந்த் தனது B.Tech Aeronautical இன்ஜினியரிங் படிப்பை 9.8 CGPA உடன் முடித்த பிறகு, Anti-drone தொழில்நுட்பத்தில் MS படிப்பை மேற்கொண்டார். இக்காலக்கட்டத்தில், அவர் பெரிய சவால்களை எதிர்கொண்டார். மனம் தளராத ஆனந்த் தன் தந்தையுடன் இணைந்து, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஸ்பேஸ் ஸோன் இந்தியாவை (Space Zone India) நிறுவினார்.

ராக்கெட் வளர்ச்சி, கற்றல் மற்றும் மேம்பாடு (Rockets development, and learning and development) என்ற இரு பகுதிகளை மையமாகக் கொண்டு இந்நிறுவனம் செயல்பட ஆரம்பித்தது. விண்வெளி தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது, மற்றும் மாணவர்களுக்கு கல்வியினால் உண்டாகும் மேன்மையை எடுத்துக்

**இதை வாசிக்கும் வாலிபர்களே, ஆனந்தின் பயணம் சவால்களின்றி இல்லை. கல்வியில் சிரமங்களை எதிர்கொள்வதிலிருந்து பல தடைகளைக் கடந்து வந்துள்ளார். இலக்கை அடைய விடாமுயற்சி மிகவும் முக்கியம். என்னால் முடியாது என்று நீங்கள் நம்பினால் உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது. ‘என்னால் முடியும்’ என்று நம்புங்கள், அப்பொழுது வானம் மட்டுமல்ல, விண்வெளிக் கூட உங்கள் வசப்படும்...!!**



திருச்சி மண்டலம்
MOUNT SINAI 2024
(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)
அக்டோபர் 31
வியாழக்கிழமை (தீபாவளி தினத்தன்று)
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

திருச்சியில்...

சகோ. சாம் பிரசாத்
YMCA ஹால், G.H. எதிரில்,
புத்தூர், திருச்சி – 17
தொடர்புக்கு : 9489775075

பெரம்பலூரில்...

சகோதரி செல்லாராணி அப்பாத்துரை
உலக எழுப்புதல் ஜெப மையம்
71 M K காம்ப்ளக்ஸ்,
வெங்கடேசபுரம்,
பேங்க் ஆஃப் பரோடா அருகில்,
திருச்சி மெயின் ரோடு
தொடர்புக்கு : 9788812428 / 04328-224428

# Revival IGNITERS 2021 Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (1st Sep)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre,
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal, # 3,
6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3,
1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (14th Sep)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church, Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (8th Sep)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor, 163,
raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station),
Room No.10,
Opp. Bank of Maharashtra,
Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor,
P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex,
Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 3rd SUNDAY (15th Sep)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
# 5, Gandhi Irwin Road,
Egmore,
(Opp. Railway Station)
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (28th Sep)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (22nd Sep)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 29th SEPTEMBER
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON THE LAST SUNDAY OF EVERY MONTH

தகவல்: காலேப்



# இரயில் பயணம்

பாகம்-5






ஆண்ட்ரூ மழையில் நனைந்தவாறே ரயிலுக்குள் ஏறுகிறான். Bagல் உள்ள லேப்டாப் மற்றும் வேறு சில பொருட்கள் மழையில் நனைந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே, இருக்கையில் அமர்கிறான்...

**விக்கி:** என்னடா... மழையிலே ரொம்ப நனஞ்சிட்ட போல... என்று விசாரித்துக் கொண்டே ஆண்ட்ரூவின் Bagஐ ஒழுங்கு செய்ய உதவி செய்கிறான்.

**ஆண்ட்ரூ:** எப்போ மழை பெய்யும்? எப்போ வெயில் அடிக்கும்னு கணிக்கவே முடியலடா?

**விக்கி:** இப்படித்தான் பல மாதங்களாக climate இருக்கு. அதனால தான் நான் எப்பவும் Bagல குடை இல்லைனா rain coat வச்சிருப்பேன்.

**ஆண்ட்ரூ:** இது கூட பரவாயில்ல... வட இந்தியாவிலே ஒருபக்கம் தண்ணீர் பஞ்சம் மற்றும் வறட்சி, இன்னொரு பக்கம் புயல், மழை மற்றும் வெள்ளம் என்று பெரிய பாதிப்பா இருக்கு. இதுக்கெல்லாம் காரணம் எல்நினோ (EL -Nino) தான்...


**விக்கி:** EL –Ninoவா? அப்படின்னா என்னடா?


**ஆண்ட்ரூ:** டேய்.. சூடா டீ வருது... அதப் பத்தி பேசுறதுக்கு முன்னாடி... இரண்டு டீ வாங்கு! இந்த climateக்கு சூப்பரா இருக்கும்.

**ஆண்ட்ரூ:** பசிபிக் பெருங்கடலில் எப்போதும் ஒரு காற்று (Trade Winds) வீசிக்கொண்டே இருக்கும். இந்தக் காற்று பசிபிக் கடலை ஒரு பக்கம் வெப்பமாகவும், மறுபக்கம் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும். இந்தக் காற்று தான் அமெரிக்கா மற்றும் தெற்கு ஆசியா நாடுகளின் காலநிலையை தீர்மானிக்கும்.

**விக்கி:** ஹூம்ம்ம் ... சரி இதுல என்ன பிரச்சனை?

**ஆண்ட்ரூ:** இந்த காற்றின் (Trade Winds) வேகம் குறைந்தாலோ, காற்று அடிப்பது நின்றாலோ, பசிபிக் கடல் முழுவதும் வெப்பமாக






மாறி வறட்சி, புவி வெப்பம் அதிகரிப்பு, மழை வெள்ளம் போன்ற பாதிப்புகளை உண்டாக்கும். இந்த எல்நினோ சராசரியாக 2 முதல் 7 ஆண்டுகள் இடைவெளியில் வருகிறது.

**விக்கி:** அப்போ இந்த ஆண்டு எல்நினோ ஆண்டா?

**ஆண்ட்ரூ:** ஆமா, ஆனால் இதற்கு முன்பு வந்த எல்நினோ ஆண்டுகளை விட, இந்த ஆண்டு பாதிப்பும், தாக்கமும் குறைவாகவே இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் இந்தியாவை பொறுத்தவரை எல்நினோ ஆண்டுகளில் பருவமழை குறைந்து வறட்சியும், தண்ணீர் பஞ்சமும் ஏற்படும்.

**விக்கி:** இந்த ஆண்டு டெல்லியில் தண்ணீர் பஞ்சம் அதிகரித்து, ஜனங்கள் வீதிகளில் தண்ணீருக்காக வரிசையில் நின்ற காட்சிகளை பார்த்தோமே...

**ஆண்ட்ரூ:** ஆமா, 1997-98 ஆண்டுகளில் இந்த எல்நினோவின் தாக்கம் உலகம் முழுவதும் உள்ள அனைத்துக் கண்டங்களிலும் தெரிந்தது. புயல், வெப்பம், வெள்ளம், வறட்சி, தண்ணீர் பஞ்சம், காட்டுத்தீ என பல்வேறு தாக்கங்களை இது உண்டாக்கியது. இதைக் குறித்த வீடியோ ஒன்றை நான் பார்த்தேன்.. உனக்கும் வாட்ஸ் அப்ல அனுப்புறேன், நீயும் பாரு...

**விக்கி:** ஹூம்ம்ம்... (பெருமூச்சு விட்டு), ஒவ்வொரு நிமிஷமும் நம்மைச் சுற்றி ஆபத்துக்கள் இருந்துகிட்டே தான் இருக்கு... ஒன்னு போனா இன்னொன்னு வருது... ரொம்ப பயமா இருக்கு.

**ஆண்ட்ரூ:** இந்த உலகத்தில் ஆபத்துக்கள் இருப்பது உண்மைதான்... ஆனால் ஆபத்துக்களிலிருந்து என்னையும், உன்னையும் பாதுகாக்க இயேசு இருக்கிறார்... அதனால் எனக்கு பயமில்லை விக்கி.

**விக்கி** (அலட்சியமாக): சரி... சரி... நீ தான் நல்ல Prayer பண்ணுவியே... எனக்கும் சேர்த்து Prayer பண்ணு... உன் இயேசு என்னை காப்பாத்துறாரான்னு பார்ப்போம்.

**ஆண்ட்ரூ:** நிச்சயமாய் காப்பாற்றுவார்! நீயே அதைப் பாக்கப்போற' என்று சொல்லி விட்டு, தான் இறங்கும் இடம் வந்தவுடன், இறங்கி சென்றான்.

இவர்கள் இருவரின் உரையாடல்கள் தொடரும்...

ஆந்திரா மாநிலம்
MOUNT SINAI 2024
(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)
அக்டோபர் 31
வியாழக்கிழமை (தீபாவளி தினத்தன்று)
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
சித்தூரில்...

சகோ. இராஜேந்திரன்
இடம் பின்னர் அறிவிக்கப்படும்
தொடர்புக்கு : 9487734603
திருப்பதியில்...

சகோ. விஜயகுமார்
உலக எழுப்புதல் ஜெப மையம்,
D.No- 19/8/11/5, 3வது மாடி,
Celekt மொபைல் கடை கட்டிடம்,
Unlimited ஷோரூம் எதிர்புறம்,
ஹதிராம்ஜி காலனி
தொடர்புக்கு : 9488938305

# ஜெபக்கையேடு



ஜெபம்: பெனிட்டா

## வெப்ப அலை

இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் ஜூன் 30ம் தேதி வரை இந்தியாவில் 61.9 கோடி மக்கள் வெப்ப அலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக மக்கள் தொகையில் 60%க்கும் அதிகமானோர் அதிக வெப்பத்தின் தாக்கத்தை அனுபவித்துள்ளனர். ஜூன் மாதம் வரை 110 பேர் வெப்பத்தின் தாக்கத்தினால் இறந்துள்ளனர். வட மாநிலங்களில் எப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. குறிப்பாக டெல்லியில் வெப்ப அலையின் பாதிப்பு அதிகமாக காணப்பட்டது. வெயிலின் தாக்கத்தினால் தண்ணீர், மின்சாரம் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.




### ஜெபக்குறிப்புகள்:

1) அதிகரித்துக் கொண்டிருக்கும் வெப்ப அலை குறைந்து, தேசம் இயல்பு நிலைக்கு திரும்ப ஜெபிப்போம்.

2) வெப்பத்தின் தாக்கத்தினால் மரணங்கள் சம்பவிக்காமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

3) வட மாநிலங்களில் வெப்ப அலையினால் தங்கள் தொழில்களை இழந்து தவிப்போருக்கு மாற்றுத் தொழில்கள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

4) மின்சாரம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, அரசாங்கத்திற்கு ஞானம் உண்டாக ஜெபிப்போம்.

## ஊட்டச்சத்து குறைபாடு

சர்வதேச அளவில் 18 கோடியே 10 லட்சம் குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்து இல்லாததால், அவர்களது உயரம், உடல் உள்ளிட்ட ஒட்டு மொத்த வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 65%த்தினர் இந்தியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 20 நாடுகளை சேர்ந்தவர்கள். தெற்காசிய நாடுகளில் மட்டுமே 6 கோடியே 40 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துமிக்க உணவு இன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த பட்டியலில் சோமாலியா நாடு முதலிடத்தில் உள்ளது.



### ஜெபக்குறிப்புகள்:

1) குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவுகள் கிடைக்கப்பெற்று உடல் வளர்ச்சியில் எந்த பாதிப்புகளும் வராமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

2) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சரியான சிகிச்சைகள் கொடுக்கப்படவும், அக்குழந்தைகள் சரியான வளர்ச்சி பெறவும் ஜெபிப்போம்.

3) ஊட்டச்சத்துமிக்க உணவின்றி தவிக்கும் நாடுகளுக்கு அண்டை நாடுகள் உணவுப் பொருட்கள் கொடுத்து, அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்ய ஆவன செய்ய ஜெபிப்போம்.

4) சோமாலியா தேசத்தில் உள்ள குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்

# செப்டம்பர் 2024



## வறுமை

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 22 கோடி பேர் வறுமையில் வாழ்கின்றனர். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 17% ஆகும். உலகில் வாழும் ஏழைகளில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் வாழ்கின்றனர். மக்கள் வறுமையில் இருப்பதற்கு கல்வியறிவின்மையும் ஒரு காரணமாக உள்ளது. அதேநேரம் நன்கு படித்தவர்களுக்கு நல்ல வேலைக் கிடைக்காமல், குறைந்த வருமானத்திலேயே வாழ்க்கையை நடத்துகின்றனர். இந்தியாவில் வேலையின்மை ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் 24.8 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர் என்று அறிக்கை ஒன்று கூறுகிறது.



### ஜெபக்குறிப்புகள்:

1) வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கும் ஜனங்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட ஜெபிப்போம்.

2) படித்த இளைஞர்களுக்கு படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கவும், அவர்களுக்கு நல்ல ஊதியங்கள் கிடைக்கப் பெறவும் ஜெபிப்போம்.

3) வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் ஜனங்களுக்கு பிரயோஜனமான திட்டங்களையும், சட்டங்களையும் அரசாங்கம் கொண்டு வர ஜெபிப்போம்.

4) இந்தியாவில் வாழும் ஏழைகளுக்கு நல்ல கல்வி, வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவும், தொழில் மையங்கள் ஆரம்பித்து வேலை வாய்ப்புகள் வழங்கப்படவும் ஜெபிப்போம்.

## குழந்தை தொழிலாளர்கள்

இந்தியாவில் சுமார் 43.5 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். யூனிசெப் அறிக்கையின்படி உலகம் முழுவதிலும் 5 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட 158 மில்லியன் சிறுவர் சிறுமிகள் வீட்டு வேலைத்தவிர, பிற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் வேலை செய்கின்றனர். பாலியல் தொழில், விவசாயம், சிறிய வணிகங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் தொழில்களில் குறைந்த சம்பளத்தில், குடும்ப சூழ்நிலைக்காக வேலை செய்கின்றனர்.



### ஜெபக்குறிப்புகள்:

1) நம் தேசத்தில் குழந்தை தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.

2) குழந்தைத் தொழிலாளர் நிலை முற்றிலும் ஒழிய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, சிறு குழந்தைகள் மீட்கப்பட ஜெபிப்போம்.

3) குடும்ப சூழ்நிலைக் காரணமாக வேலைக்குச் செல்லும் சிறுமிகள், சிறுவர்களின் குடும்பங்களுக்கு அரசு உதவித்தொகை கொடுத்து, குழந்தைகள் மீட்கப்பட ஜெபிப்போம்.

4) தொழிற்சாலைகளில் அதிகமான நேரங்கள் கடினமாக உழைக்கும் குழந்தைகளை மீட்டு, அவர்களுக்கு தகுந்த கல்வி வழங்கப்பட ஜெபிப்போம்.

# செய்திகள்!

## ரயில்வேயின் அலட்சியம்



சர்வதேச அளவில் மிகப்பெரிய ரயில் நெட்வொர்க் உள்ள நாடுகளில் இந்தியா நான்காம் இடத்தில் இருக்கிறது. சுமார் 68.525 கி.மீட்டர் தூரம் வரை ரயில் போக்குவரத்து இயங்கி வருகிறது. இந்திய அளவில் ஓராண்டுக்கு சுமார் 500 கோடி ரயில் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. மிக நீண்ட தூரத்திற்கு ஆடாமல், அசையாமல் செல்லும் பயணம், உணவு, குடிநீர், கழிவறை உள்ளிட்ட வசதிகள் இருப்பதால், முதியவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்களின் விருப்ப வாகனமாக ரயில் திகழ்கிறது. இந்தியாவின் மிகப்பெரிய பொதுத் துறை நிறுவனமாக மட்டுமல்லாமல், வருமானங்களைக் கொட்டிக் கொடுக்கும் துறையாகவும் ரயில்வே விளங்கி வருகிறது.

ரயில்வேயின் சிறப்புகளை கருதித்தான் முன்பு இத்துறைக்கென ஒன்றிய அரசு சார்பில் தனி பட்ஜெட் போடப்பட்டது. ரயில்வே துறைக்கு மட்டும் ஒரு அமைச்சர் இருந்து வந்தார். ஆனால், ஒன்றிய அரசு ரயில்வே பட்ஜெட் தாக்கல் செய்வதை அடியோடு நிறுத்திவிட்டது. தற்போது பொது பட்ஜெட் மட்டும் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. ரயில்வே துறையின் செயல்பாடுகள் தொடர்ந்து விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றன. விபத்தினால் உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

மேற்கு வங்கம்: ஹவுராவில் இருந்து மும்பை நோக்கி நேற்று முன்தினம் (30 ஜுலை) சென்ற பயணிகள் ரயில், ஜார்க்கண்ட் மாநிலம், பாராபாம்பூ பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. அதே பகுதியில் சரக்கு ரயிலும் தடம் புரண்டுள்ளது. 18 பெட்டிகள் தடம் புரண்டதில் 2 பேர் பலியாகி உள்ளனர். தற்பொழுது ரயில் விபத்துகள் சர்வசாதாரணமாகி விட்டன. ஏற்கனவே, கடந்தாண்டு ஜுன் 2ம் தேதி ஒடிசா மாநிலம், பாலசோர் மாவட்டம், பாஹாநாகா பஜார் பகுதியில் 3 ரயில்கள் அடுத்தடுத்து மோதிக் கொண்டன. இதில் 293 பேர் உயிரிழந்தனர். 900 பேர் வரை படுகாயமடைந்தனர். இந்தியாவை உலுக்கிய இந்த மாபெரும் ரயில் விபத்து, மனிதத்தவறால் நிகழ்ந்ததாக இந்திய ரயில்வே அமைச்சகம் சர்வ சாதாரணமாக தெரிவித்தது.

கடந்த 2 (ஜுன், ஜுலை) மாதங்களில் மட்டும் சுமார் 10க்கும் மேற்பட்ட ரயில் விபத்துகள் நடந்துள்ளன. ஏற்கனவே, கடந்த 2015, மார்ச் 20ல் டேராடூனில் இருந்து வாரணாசிக்கு செல்லும் ஜனதா எக்ஸ்பிரஸ் தடம் புரண்டு 34 பேர் உயிரிழந்தனர். 2016 நவம்பர் 20ம் தேதி கான்பூருக்கு அருகே புக்ராயனில் நடந்த பெரிய ரயில் விபத்தில், 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 2017, ஜனவரி 22ம் தேதி ஆந்திர மாநிலம், விஜயநகரம் மாவட்டத்தில் ரயில் பெட்டிகள் தடம் புரண்டு 39 பேர் பலியாகினர். இப்படியாக தொடர் விபத்துகள் நடந்த வண்ணம் உள்ளன.

எல்.ஐ.சி. ரயில்வே போன்ற நாட்டிற்கு வருமானம் அள்ளித்தரும் துறைகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் இறங்காமல், அவற்றை தனியார் மயமாக்குதல், வளர்ச்சியை தடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஒன்றிய அரசு இறங்கி வருவது ஆபத்தானது. இனியாவது, நாட்டின் முக்கிய போக்குவரத்து மையமாக திகழும் ரயில்வே துறையை மேம்படுத்தி, விபத்துகளை குறைப்பதற்கான வழிமுறைகளை ஒன்றிய அரசு ஆராய வேண்டுமென்பதே இந்திய மக்களின் எதிர்பார்ப்பு.

**– 01 ஆகஸ்ட், 2024, தினகரன்.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

வேதாகம கதாபாத்திரம்: சுமா

# சிப்பிக்குள் முத்து



## பிலிப்பு

இளம் வாலிபர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். சிப்பிக்குள் முத்து என்ற தொடரின் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம். கடந்த மாதம் ஆறுதலின் மகனாகிய பர்னபாவைக் குறித்து அறிந்து கொண்டோம். இம்மாதம் நாம் பார்க்க இருக்கும் தேவ மனிதர் பிலிப்பு.

பிலிப்புவின் பயணம் பந்தி விசாரணை செய்வதில் தான் முதலாவது தொடங்கியது (அப். 6:5). பிலிப்பு பந்தி விசாரணை செய்வதில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், சுவிசேஷ வசனத்தை பிரசங்கிக்கத் தொடங்கினார் (அப். 8:5). விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவராய் வல்லமையாய் கிறிஸ்துவை பிரசங்கித்தார். இவர் மூலம் தேவன் மகிமையடையத் தொடங்கி அநேக அற்புதங்களைச் செய்தார்.

எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளின் மந்திரிக்கு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு இயேசுவைக் குறித்து பிரசங்கித்து, தண்ணீர் உள்ள ஓரிடத்தைப் பார்த்து, இரதத்தை நிறுத்தி, பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்புவைக் கொண்டு போய்விட்டார். மந்திரி இரட்சிப்பின் சந்தோஷத்தோடு தன் வழியேப் போனான் (அப் 8 : 36-39). இப்படி பிலிப்பு சென்ற இடமெல்லாம் வல்லமையாய் கிறிஸ்துவுக்காக செயல்பட்டார்.

பிலிப்புவின் பயணம் ரஷ்யாவிலுள்ள சைத்தியாவிலும் நடந்தது என்று வரலாறு கூறுகின்றது. 20 வருடம் அங்கு இயேசுவைப் பற்றி போதித்தார். பின்பு துருக்கியிலுள்ள ஏராப்போலி என்னும் நகரில் வந்து சுவிசேஷப் பயணத்தைத் தொடந்தார். இந்த இடத்தில் பிலிப்பு இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்.

இதை வாசிக்கும் வாலிபர்களே, பிலிப்புவின் பயணம் பந்தி விசாரணையில் தொடங்கினாலும், இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்ததில் தான் முடிவடைந்தது. கிறிஸ்துவுக்காக தன்னுடைய ஜீவனையும் பாராமல் வைராக்கியமாக ஊழியம் செய்தார். நாமும் பிலிப்புவைப் போல விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்தவர்களாய் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தைரியமாகப் பிரசங்கிக்க வேண்டும்.

“சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு” (2 தீமோத்தேயு 4:2).

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 08 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை
2024

## டெல்லியில்...

நாள்: செப்டம்பர் 14,
சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: ECI, Faith Cathedral
C2/15, Janakpuri,
New Delhi

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 7217663240

## திருவாடானை தாலுக்கா கைக்காட்டியில்...

நாள்: செப்டம்பர் 29,
ஞாயிற்றுக் கிழமை
நேரம்: மதியம் 3 மணி முதல்
மாலை 6.30 மணி வரை

இடம்: வானத்தின் வாசல்,
வாட்டர் டேங்க் அருகில்,
மதுரை ரோடு, கைக்காட்டி,

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 9003641426| 9786654707 | 9750955548

## ஹைதராபாத்தில்...

நாள்: செப்டம்பர் 21,
சனிக்கிழமை
நேரம் : காலை 10 மணி முதல்
மாலை 3 மணி வரை

இடம்: House of Jesus
1st Floor, Assumption House Building,
Opp. Lane to Millennium Methodist Church,
S.D Road, Secunderabad

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 9962085523| 8106082222 | 9959976037

## திண்டிவனத்தில்...

நாள்: செப்டம்பர் 7,
சனிக்கிழமை
நேரம் : காலை 9 மணி முதல்
மதியம் 1 மணி வரை

இடம்: ஆதி லட்சுமி திருமண மண்டபம்,
மரக்காணம் ரோடு,
இந்திரா நகர், திண்டிவனம்

செய்தியும் ஜெபமும்: சகோ. சதீஷ்குமார்

தொடர்புக்கு : 9444041265 | 9442885315



சகோ. அவினாஷ்



சகோ. சதீஷ்குமார்